Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஆனி-29 13-07-2004 செவ்வாய்க்கிழமை ஓசை -146

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672
(சி-9598)



## மட்டக்களப்பில் இருதேச விரோதிகள் ஆயுதங்களுடன் புலிகளால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இரு தேச விரோதிகள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் சமீபகாலமாகத் தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த அரசடித்தீவைச் சேர்ந்த இராசரத்தினம் திருத்தணி (25)புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பஞ்சாட்ச்சரம் கிருஷ்ணகுமார் ஆகிய இருவருமே விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்த ஆலய பூசகர் புலிகளால் கைது

மட்டக்களப்பு போரதீவில் சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்த ஆலய பூசகர் ஒருவர் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போரதீவு கற்பகப்பிள்ளையார் ஆலய பூசகரான முத்துலிங்கம் ரவீந்திரன் (வயது 28) என்பவரே இவ்வாறு விடுதலைப் புலிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கடுக்காய் முனையைச் சேர்ந்த இவர் மேற்படி ஆலயத்தினுள் கைக்குண்டு ஒன்றினை மறைத்து வைத்துள்ளார். இக்கைக்குண்டு தற்போது விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளது.

# கொழும்பு, கிழக்கு வன்முறைகள் சமாதான ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தல்

### - சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

**கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் கடந்தவாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை குழப்பக் கூடிய அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அடைந்த வெற்றியை அடுத்து சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கை யிலேயே சனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

இதேவேளை இலங்கையர்கள் அனைவரும் எதிர்பார்க்கும் நிரந்தர சமாதானத்திற்கு இந்தச் சம்பவங்கள் தடையாக அமைந்து விடலாம் என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடைப்பிடித்துவரும் கொள்கைகளை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும், இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை அமைப்பது உட்பட விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பஸ்தர் ஒருவர் மட்டக்களப்பில் கொலை

மட்டக்களப்பில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார்.

பழச்சோலை- வந்தாறுமூலையைச் சேர்ந்த ஜே.சிவகுமார் (வயது-27) என்பவரே சுடப்பட்டவராவார். செங்கல் சூளையில் வேலைக்குச் சென்ற இவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ராது பலம என்னும் இடத்தில் வைத்து சுடப்பட்டுள்ளார்.

வேலைக்குச் சென்ற தனது கணவனை பலாத்காரமாக உழவு இயந்திரத்தில் கரடியனாறு நோக்கி ஏற்றிச் சென்றே சுட்டுள்ளனரென இவரது மனைவியான சந்திராதேவி தெரிவித் துள்ளார். ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நோர்வேத்தூதுவர் இன்று கிளி.வருகிறார் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது குறித்துப் பேசலாம்

இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் இன்று கிளிநொச்சி செல்லவுள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ள அவர் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக முக்கிய பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சமாதானப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலை உடனடியாக தயாரித்து வழங்குமாறு அரசாங்கம் நோர்வே ஏற்பாட்டாளர்களைக் கேட்டுள்ளது. அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து இந்த வேண்டுகோளை அரசாங்கத்தின் சமாதான செயலகத் தலைவர் ஜயந்த தனபால நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரிடம் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் அடிப்படையிலேயே நோர்வே ஏற்பாட்டாளர்கள் சனாதிபதியை சந்திக்கவுள்ளதாக தெரிவித்த ஹரிம் பீரிஸ் அது எப்போது என்ற விடயத்தை வெளியிடவில்லை. எனினும் எதிர்வரும் ஒருசில வாரங்களில் சனாதிபதிக்கும் நோர்வேயின் உயர்மட்டத்தினரிற்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண வன்முறை விடயங்கள் கருணாவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்புகள் போன்றவை சம்பந்தமாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமது நிலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களை எதிர்த்து ஜே.வி.பி சுவரொட்டிப் போராட்டம்

(கொழும்பு)

தீவிர இடதுசாரிக்கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டாளியுமான ஜே.வி.பி விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முதல் கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் சுவரொட்டிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.




"ஈழத்திற்கான வழியாக இடைக்கால நிர்வாகம் கோரும் புலிகளின் முயற்சியைத் தோற்கடிப்போம்" என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் பொதுத் தேர்தலின் பின்னர் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரட்ணசிறியின் யாழ்ப்பாண வருகைக்காக முகமாலையூடான போக்குவரத்துத்தடை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முகமாலை சோதனைச் சாவடியைப் பார்வையிட நேற்று வருகை தந்ததையடுத்து முகமாலையூடான போக்குவரத்துத் தடைப் பட்டது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்தனா.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் முகமாலை சோதனை சாவடியை பார்வையிட்டு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்துவதற்காக இவர் வருகை தந்திருந்தார். இதனால் முகமாலை சோதனைச் சாவடியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு முன்னரே போக்கு வரத்துக்கள் அனைத்தையும் படையினர் தடைசெய்தனர்

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கி வந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன,

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் படை அரண்களுக்கு ரட்ணசிறி திடீர் விஜயம்

இலங்கை அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு ரீதியிலான விஜயமொன்றை நேற்று குடாநாட்டிற்கு மேற்கொண்டுள்ளார்.

முற்று முழுதாக இராணுவப் பாதுகாப்புடன் விஜயம் செய்த பிரதிப பாதுகாப்பு அமைச்சருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் மற்றும் முப்படைத் தளபதிகளும் வருகை தந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சிக் கரையோரப் பகுதிகள் மற்றும் நாகர்கோவில், முகமாலை மற்றும் கிளாலிப் பகுதியிலுள்ள முன்னரங்கப் பாதுகாப்பரண் பகுதிகளிற்கும் சக அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக பலாலியில் விசேட மாநாடொன்றை நடாத்தியிருந்ததாகவும், பின்னர் காங்கேசன்துறை கடற்படைத் தளத்திற்குச் சென்ற குழு அதையடுத்து காரைநகர் மற்றும் நயினாதீவுப் படைத்தளங்களுக்குச் சென்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அதையடுத்து விமானப் படை ஹெலிகொப்ரர் மூலம் முகமாலை,

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

துரைராசா சதீஸ்குமார் ஆகிய எனது அடையாள அட்டையும், போக்குவரத்து அனுமதிஅட்டையும் மற்றும் சில ஆவணங்களும் வட்டக்கச்சிக்கும் ஜெயந்தி நகருக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் அல்லது வீட்டுஇலக்கம்41இல் கொடுத்து உதவவும். (4639)

### தவறிவிட்டது

அ.கந்தசாமி என்பவருடைய அ.அட்டை, பில் என்பன 09.07.2004 அன்று கிளிநொச்சிக்கும் முழங்காவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது நாச்சிக்குடா சந்தி இளவேனிலில் ஒப்படைக்கவும். (4805)

### தவறிவிட்டது

ஆதிநாராயணபிள்ளை சிவச்சந்திரன் ஆகிய எனது அ.அட்டை (இல-813473631v) போ.க.பிரிவின் பயண அனுமதி சிட்டை அடங்கிய பேஸ் 11.07.2004 ஞாயிற்றுக் கிழமை புதுக்குடியிருப்பு-முகமாலை பேருந்துப்பணியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.(4806)

### கருத்தரங்கு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான இறுதிச் செயலமர்வு 17.07.2004 (சனி-காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை)அன்று கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள கேம்பிறிஜ்கல்லூரியில் நடைபெறும் கட்டணம் 150/= (4630)

### போட்டிப்பரீட்சைவகுப்பு

ஆசிரியர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்கான பயிற்சிவகுப்புக்கள் வார நாட்களில் மாலை 5.00 - 6.00 வரையும், வார இறுதி நாட்களில் காலை9.00-12.00மணி வரையும் வவுனியா புகையிரத நிலையத்திற்குமுன்பாகஇயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறும். (4635)


### கேம்பிரிஜ் கல்லூரி

உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. Work shop on English for communi cation நவீனமுறையில் ஆங்கில தொடர்பாடல் பட்டறை A/L பரீட்சைக்கு தோற்றியோர். தொழில்சார் நிறுவனங்களில் பணிபுரியும் இளைஞர், யுவதிகள் ஆகியோர். காலம் 14.07.2004 மாலை 5.மணி. ஆசிரியர் கணேசன் நிர்வாகி. (4631)

# கனடாவில் உணர்வு பூர்வமாக நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வுகள்

கரும்புலிகள் தினம் கனடாவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டிக் கடந்த சனிக்கிழமையன்று





உலகத்தமிழர் கலை பண்பாட்டுக் கழகமும் "பி" பிரதேசத் தொண்டர்களும் இணைந்து பல கலை நிகழ்வுகளை வழங்கினர்.

எழுச்சி நடனங்கள், நாடகங்கள் என்பன இடம் பெற்றதுடன் உரையினை உலகத் தமிழர் பத்திரிகைப் பொறுப்பாளர் கமல் நிகழ்த்தினார். "தலைவனும் தமிழும்", "வீரத்தின் தாகம்", "எங்கள் தேசத்திலே" போன்ற நடனங்களும் " ஆரிராரோ", "அம்மா வரப்போறா", "இருப்பு" "விதை நெல்லு காத்திருக்கு", "தொட்டுவிடும் தூரமல்ல" போன்ற நாடகங்களும், கலைஞர்கள் கௌரவிப்பும் இடம் பெற்றுள்ளது.

(தகவல்,படம்:எழில்)

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் பூநகரி பிரதேசக்கிளை திறப்பு விழா

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பூநகரிப் பிரதேசக்கிளை நேற்று (திங்கட்கிழமை) பூநகரி வாடியடியில் திறந்து வைக்கப்பட்டது. கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் திரு செ.தவக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாவீரர் யாழரசன் மாவீரர் யாழமுதன் ஆகிய மாவீரர்களின் தந்தையார் செல்வரட்ணம் அவர்களும் பூநகரி மகா வித்தியாலய உப முதல்வர் திரு புஸ்பராசா ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை பூநகரி கிராமப் பொறுப்பாளர் திரு வேந்தன் அவர்கள் ஏற்றி வைத்தார். அக வணக்கத்தினைத் தொடர்ந்து வங்கியின் கட்டடத்தினை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு.சி. கரிகாலன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

கருத்துரைகளை ஞானிமடம் கமக்காரர் அமைப்புத்தலைவர், கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் திரு ப.சுஜன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் மூன்று வழமையாளர்கள் சம்பிரதாய பூர்வமாகக் கணக்கினை ஆரம்பித்துப் பணத்தினை வைப்புச் செய்ததைத் தொடர்ந்து 05 பயனாளிகளுக்கு சூரிய மின் ஒளிக்கடன் திட்டத்தின் கீழ் சூரிய மின்கலம் கடனாக வழங்கப்பட்டது. இறுதியாக செம்மங்குன்று கமக்காரர் அமைப்புத்தலைவர் கிருஸ்ணசாமி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. தொடர்ச்சியாகப் பொதுமக்கள் வங்கியில் கணக்குகளை ஆரம்பித்தனர்.



# கிளி. ஆனந்தநகர் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஆனந்தநகர் கிராம மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் மற்றும் காணி மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் நேற்று இடம் பெற்றன.

ஆனந்தநகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நடவடிக்கையின் போது ஆனந்த நகர் கிராமத்தைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் கலந்து தங்கள் காணிப்பிரச்சினைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பிக்குணி கழுத்து நெரித்துக் கொலை சடலம் பொலிசாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட பௌத்த பெண் துறவி (பிக்குணி)யின் சடலம் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

எழுபத்தைந்து வயதுடைய இப்பிக்குணியின் சடலம் சென்ற வெள்ளி அப்புத் தளை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கலுபஹன எனும் இடத்தில் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னரே இவர் கொல்லப்பட்டிருக்கலாம் என தாம் நம்புவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சியின் பல பகுதிகளில் மாயாஜால வித்தைக் காட்சிகள்

(அலுவலக செய்தியாளர்)

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரின் நலிவுற்றோர் நலன்வாழ்வுத் திட்ட நிதிக்காக நடாத்தப்படும் மாபெரும் மாயாஜால வித்தைக் காட்சிகள் தற்போது கிளி.மாவட்டத்தில் பல இடங்களிலும் நடாத்தப் பெற்று வருகின்றது. நேற்றையதினம் கனகபுரம் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு கனகபுரம் ம.வி மாணவர்களுக்கும், மாலை 6.00 மணிக்கு பொது மக்களுக்கும் மேற்படி மாயாஜால வித்தைகள் காண்பிக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் பெருந்திரளாக மாணவர்களும் பொது மக்களும் கலந்து மாயாஜால வித்தையினை கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டி மாவட்டச் செயலகத்தில் வாக்குகள் எண்ணும் போது தீ விபத்து

(கண்டி)

வாக்குகள் எண்ணும் நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று முன்தினம் (11ஆம் திகதி) கண்டி மாவட்டச் செயலகத்தில் மாகாணசபைத் தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்த போதே மற்றுமொரு பிரிவில் தீ பரவத் தொடங்கியது. எனினும் வாக்குச் சீட்டுக்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களின் உணவுப்பொருட்கள் தீயில் எரிந்து அழிந்து விட்டதாகவும்,

பொலிசாரின் உதவியுடன் கண்டி மாநகரசபை தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டதாகவும், மின் ஒழுங்கே இத் தீ பரவலுக்குக் காரணம் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### இன்று நடைபெறாது

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட அரச செயலகத்தில் வழமை போல் நடைபெறவிருந்த மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று நடைபெறமாட்டாதென அரச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் கா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

# கி.அ. வங்கிக்கிளைகளால் பயனாளிகளுக்கு இவ்வாண்டு நாலரைக் கோடி ரூபா கடன்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகளில் இவ்வாண்டில் (சனவரி-யூன்) 1227 பயனாளிகளிற்கு 43452212ரூபா நிதி விவசாயம் மற்றும் சுய தொழில் நடவடிக்கைகளுக்காக கடனாக வழங்கப்பட்டள்ளது.

முள்ளியவளை, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி, கனகராயன்குளம் போன்ற இடங்களின் கிளைகளை கொண்டியங்கும் த.பொ.மே நிறுவன கிராமிய அபிவிருத்தி வங்கி இவ்வாண்டு சனவரி தொடக்கம் யூன் மாதம் வரையான காலப்பகுதியில் சுய தொழில் கடனாக 555 பயனாளிகளிற்கு 32606212 ரூபாவும், விவசாயக் கடனாக 672 பயனாளிகளிற்கு 10846000 ரூபாவும் கடனாக வழங்கியுள்ளது. இவ்வங்கியினால் மக்களின் வாழ்வை மேம்படுத்தும் முகமாக விவசாயக் கடன், தொழிற்துறைக் கடன், சுய தொழில் கடன், வைப்புக்கு எதிரான கடன் போன்ற கடனுதவி திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

### கால்நடைகள் ஏலத்தில் விடப்படும்

கட்டாக்காலிகளாக நின்று பயிரழிவினை விளைவித்த கீழ்க்குறிப்பிடப்படும் நிறம், குறிகளையுடைய

01.A.N கன்னத்தில் X கழுகன் நாம்பன் (செங்காரி)
02. K.T மாவெள்ளைப்பசு
03. M.S மயிலை நாம்பன்
04. S.A சிவப்புப்பசு

கால்நடைகளை எதிர்வரும் 20/07/2004ஆம் திகதிக்கு முன் உரிமையாளர் வந்து பெற்றுக் கொளளத்தவறின் த.பொ.மே. நிறுவன கிளி.மாவட்டத்தால் 22/07/2004ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விடப்படும்என்பதனை அறியத் தருகின்றோம்.

த.பொ.மே.நி,
கிளி.மாவட்டம்.

(4810)



# ஈராக்கில் தீவிரவாதிகளுக்குப் பொதுமன்னிப்பு

# இடைக்கால அரசு சாதகமாக பரிசீலிப்பு

(பாக்தாத்)

**ஈராக்கில் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகத் தாக்குதலை நடத்தி வருகின்ற கிளர்ச்சிவாதிகளுக்குப் பொது மன்னிப்பை வழங்குவது பற்றி அந்நாட்டின் இடைக்கால அரசாங்கம் சாதகமாக பரிசீலித்து வருகிறது. இடைக்கால அரசாங்கத்தின் சனாதிபதி காசீா அல்ஜவார் பத்திரிகை ஒன்றிற்குக் கருத்துத்தெரிவிக்கையில், இதனைத் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் அடுத்த சில நாட்களுக்குள் பொது மன்னிப்பு சம்பந்தமாக அறிவிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். இவர்களுக்கு பொது மன்னிப்பை வழங்குவது முதலாவது நடவடிக்கையென்றும் இதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் திட்டங்கள் வகுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பின் போது தாங்கள் மேற்கொண்ட கிளர்ச்சிவாத நடவடிக்கைகள் சம்பந்தமாக கவலை தெரிவிப்பதாகவும் அத்தகைய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள மாட்டோமெனக் கிளர்ச்சிவாதிகள் பிரகடனம் செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார். இதேவேளை அவர்கள் எவ்வித விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படமாட்டார்களென வலயுறுத்திக் கூறியுள்ளார்.

## எச்சரிக்கை

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் சார்பாக நீதிமன்றில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் கொல்லப்படுவார்களென ஈராக்கின் பெண்கள் அமைப்பொன்று எச்சரித்துள்ளது.

சதாம் ஹுசைன் தண்டனை அனு பவிக்க வேண்டும் எனவும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.




சீனாவின் சுகாதாரத் தொழிலாளர்கள் கிழக்கு மாகாணத்தில், யுஷா ஓ மாவட்டத்தில் உள்ள குன்றுகளில் உள்ள கோழிப்பண்ணைகளைச் சுற்றி நோய்ப் பாதிப்பிற்குள்ளான பிரதேசத்தின் புற எல்லையில் பாதுகாப்பு வேலியை அமைக்கின்றனர். இந்த மாதத்தின் முற் பகுதியில் கிழக்குச் சீனாவில் பறவைக்காய்ச்சல் தலை தூக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் பாராளுமன்ற மேல்சபைத் தேர்தலில் பிரதமரின் லிபரல் சனநாயகக் கட்சி தோல்வி

(டோக்கியோ)

ஜப்பானிய பாராளுமன்றத்தின் மேல்சபைக்கென நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமியின் லிபரல் சனநாயகக் கட்சி தோல்வி கண்டுள்ள போதிலும் அவரது ஆளும் கூட்டணி மேல்சபையில் அதன் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

லிபரல் சனநாயகக்கட்சி 51 ஆசனங்களை வென்றெடுக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 49 ஆசனங்களை மட்டும் பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான சனநாயகக் கட்சி இதுவரை மேல்சபையில் 38 ஆசனங்களைக் கொண்டிருந்த போதிலும் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் 50 ஆசனங்களைப் பெற்றுள்ளது. 62 வயதான கொய்சுமியின் லிபரல் சனநாயகக் கட்சி எதிர்பார்த்த ஆசனங்களைப் பெறாமையால் ஜப்பானில் அது மேற்கொள்கின்ற பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுமா? எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.



இஸ்ரேல் காஸாவில் யூலை–11 இல் நடந்த கார்க் குண்டுத்தாக்குதலில் பலியான இரண்டு பலஸ்தீனப் போராளிகளின் இறுதிச்சடங்கில் அணிவகுத்துச் செல்லும் முகமூடியணிந்த பலஸ்தீனப் போராளிகள்.

# எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த பியூயியோன் என்ற புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

15 சர்வதேச எய்ட்ஸ் நோய் தடுப்பு மாநாடு பாங்கொங்கில் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளது. இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இம்மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு ஆண்டுகள் இதனைப் பாவிப்பதன் மூலம் எய்ட்ஸ் நோயை ஒழிக்கமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தின் றோஜ் நிறுவனம் இம் மருந்தை தயாரிக்கின்றது. நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்;

ஏனைய மருந்துகளைப் போல வில்லைகளாக இம்மருந்தை உபயோகிக்க முடியாதெனவும், ஊசி மூலமே இதனை உடலினுள் செலுத்த இயலும் எனவும் இதன் விலை அதிகமானதெனவும் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோயாளி ஒருவர் ஒரு வருடத்திற்கு இம்மருந்தைப் பாவிப்பதற்கு 20 ஆயிரம் டொலர் அவருக்குத் தேவைப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.




யூலை 11 இல் மணிலாவில் நடந்த கூட்டம் ஒன்றின் போது "சனாதிபதி குளோரியா மகாபகல் அறோயோ ஒரு பொய்யன்" எனக் கூறும் சுவரொட்டியைப் பிடித்திருக்கும் பிலிப்பைன்ஸ் எதிர்ப்பாளர்கள்.

# அணிசேரா அமைப்பில் சீர்திருத்தம் அவசியம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்து

அணிசேரா நாடுகள் அமைப்பில் தீவிர சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் ஞாயிற்றுக்கிழமை வலியுறுத்தினார்.

திருவனந்தபுரத்தில் உள்ள நேரு மையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் "நேருவின் கொள்கைகள் மாறிவரும் பரிமாணங்கள்" என்ற பொருளில் நட்வர்சிங் உரை நிகழ்த்தினார். அதன் விபரம் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப அணிசேரா நாடுகள் அமைப்பும் வளர்ந்து கொண்டே செல்ல வேண்டும். என்று இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு விரும்பினார். சர்வதேச சூழ்நிலை மாறியிருக்கும் இந்நேரத்தில் அணிசேரா நாடுகள் அமைப்பில் தீவிர சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் தமது தொழில் கட்சியைப் புத்தாக்கம் செய்ததைப் போல அணிசேரா நாடுகள் அமைப்பையும் புத்தாக்கம் செய்ய வேண்டும். இந்தியாவுக்கென சுயேட்சையான வெளியுறவுக் கொள்கையை நேரு உருவாக்கினார். எந்தத் தத்துவத்துக்குள்ளும் அது சிறைபட்டு விடவில்லை. புதிது புதிதாகப் பிரச்சினைகள் எழும் போது அவற்றை எதிர்கொள்ளத்தக்க வகையில் நீக்குப்போக்கானது. நமது கொள்கை இஸ்ரேலுடனான உறவைப் பெரிதும் மதிக்கின்றோம். "இஸ்ரேல் நாட்டுடனான உறவை இந்தியா பெரிதும் மதிக்கிறது. ஆனால் பலஸ்தீனர்களுடன் இந்தியாவுக்கு உள்ள நெருக்கமான உறவை அது எந்த வகையிலும் பாதிக்காது என்று நட்வர் சிங் குறிப்பிட்டார். திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது; நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது இஸ்ரேலுடன் உறவு பலப்படத்தொடங்கியது. இப்போது இஸ்ரேலில் நமது தூதரகமும் தூதரும் உள்ளனர். ஆனால் இது எந்த வகையிலும் பலஸ்தீனத்துடனான நமது உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றார் நட்வர்சிங்.




கிழக்கு ஜெருசலத்தில் இஸ்ரேலிய எல்லைக் காவலர் சர்ச்சைக்குரிய இஸ்ரேலிய பாதுகாப்பு வேலிப்பகுதியில் ஒலிவ் மரங்களை வெட்டும் தொழிலாளர்களை நிறுத்துவதற்கு முயலும் பலஸ்தீனர் ஒருவருடன் கைகலப்பு இழுபறியில் ஈடுபட்டுள்ளார்.

## கோரிக்கை

(கோலாலம்பூர்)

பலஸ்தீன எல்லைகளில் இஸ்ரேல் அமைத்துள்ள தடுப்புச்சுவரை இடிக்குமாறு கோரி ஐ.நா.சபை இஸ்ரேலை பணிக்க வேண்டுமென மலேசியா கேட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பு ஏற்கக்கூடியதென மலேசியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



பாக்தாத்தின் அயலிலுள்ள 'அற்க கோல' களஞ்சியத்தை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து வீதியில் துப்பாக்கிச் சன்னங்களின் உறைகளைச் சேகரிக்கும் ஈராக்கிய இளைஞர்.

# 2 1/2 வருடங்களாக கட்டியெழுப்பிய நம்பிக்கைகளை சிதறடிக்கும் வகையில் சம்பவங்கள் நிகழ்கின்றன

-அரசியல் துறைப்பொறுப்பாளர் கண்டனம்

**“கடந்த இரண்டரை வருடங்களாகக் கட்டியெழுப்பிய நம்பிக்கைகளை சீர்குலைத்து மீண்டும் ஒரு யுத்த நெருக் கடியை நோக்கி சிறிலங்கா அரசும், படையினரும் தள்ளிக் கொண்டிருப்பதாகவே அண்மைக்கால சம்பவங்கள் உணர்த் துகின்றன.” இவ்வாறு தமிழீழஅரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

பி.பி ஸி க்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவிக்கையில்; சிறிலங்காப் படையினருடைய ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்ற படுகொலைகள் சீர்குலைவு நடவடிக்கைகளை நீக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை எடுக்குமாறு நாம் கூறியும், இது சம்பந்தமாக படையினர் எந்த நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை. தற்போதுள்ள அரசாங்கமும் படையினரும் கடந்த இரண்டரை வருடங்களாகக் கட்டியெழுப்பிய நம்பிக்கைகளை சீர்குலைத்து மீண்டும் ஓர் யுத்த நெருக்கடியை நோக்கித்தள்ளிக் கொண்டிருப்பதாகவே நாங்கள் அண்மைக்காலமாக இடம் பெற்றுவருகின்ற வன் முறைச் சம்பவங்களை வைத்து எண்ணுகிறோம் என்றார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம் பெற்ற வன்முறையை நீங்கள் எவ்வாறு அர்த்தப்படுத்துகின்றீர்கள். அதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள் என வினாவிய வேளை,

இதனை நாங்கள் நீண்ட காலமாக வலியுறுத்திக் கொண்டு வருகின்றோம். படையினருடைய மறைமுக ஆதரவுடன் முன்னெடுக்கப் படுகின்ற படுகொலைகள், சீர்குலைவு நடவடிக்கைகள் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே நடைபெறுகின்றன. பொதுமக்கள் மீதானதும், போராளிகள் மீதானதுமான படுகொலைகளை நீக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென கூறிவருகின்றோம். இது சம்பந்தமாக படையினர் ஆக்கபூர்வமான எந்தநடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை. படுகொலைகளுக்கும், வன்முறைகளுக்கும் காரணமானவர்களையும் அவர்கள் ஆயுதங் களுடன் நடமாடுகின்ற நடவடிக்கைகளையும் கொழும்பிலும் அவர்கள் சுதந்திரமாக அனுமதித்துள்ளமை ஏற்கனவே அறிந்த உண்மை. அங்கிருந்துதான் கருணாவினுடைய பிடியிலிருந்தும், இராணுவப் புலனாய்வு அமைப்பினுடைய பாதுகாப்பிலிருந்தும் தப்பி வந்தவர்கள் எங்களிடம் பல விடயங்களை முன் வைத்துள்ளனர். எனவே இதன் எதிரொளியாக எங்களுடன் மிக நெருக்கமாக சம்பந்தப்படுத்திப் பார்க்கக் கூடியதாகத்தான் இந்நிகழ்வுகளை நாங்கள் பார்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

## வீதிப்புனரமைப்பு ஆரம்ப வைபவம்

(உடையார்கட்டு)

உலக உணவுத்திட்ட உதவியுடன் உடையார்கட்டுவடக்கு வீதி புனரமைப்புப்பணிக்கான ஆரம்ப வைபவம் உடையார் கட்டு வடக்கு கமக்காரஅமைப்புத்தலைவர் தலைமையில் சனிக்கிழமை இடம் பெற்றது. (19)

## உடனடித்தேவைகள் குறித்துக் கலந்துரையாடல்

(முள்ளியவளை)

கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவனத்தினால் முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களின் அவசர உடனடி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மக்களின் தேவைகள் பற்றிய கலந்துரையாடல் முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சோ.கலாமலர் தலைமையில் அண்மையில் முள்ளியவளை கிழக்கு காட்டா விநாயகர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படிக் கலந்துரையாடலில் கிராமத்தில் மக்களின் உடனடித் தேவைகள் பற்றியும் கெயார் நிறுவனத்தின் செயற்பாட்டுத்திட்டத்தின் நோக்கம் பற்றியதானகருத்துரையினை கெயார் நிறுவன இணைப்பாளர் கனேசலிங்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து இத்திட்டத்தை எவ்வாறு மக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துரைகளை முள்ளியவளை வலயப் பொறுப்பாளர் நாகமைந்தன் முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலர் கு.தெய்வேந்திரம் கலைமகள் வித்தியாலய ஆசிரியர் இளஞ்சிங்கநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து மக்கள் தங்கள் தங்கள்தேவைகளை எடுத்துக் கூறிகலந்துரையாடப்பட்டது.(ஆ)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(கண்டாவளை)

கண்டாவளைக் கோட்டத்தில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளில் வரவுகுறைந்த மாணவர்கள், இடைவிலகிய மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரீடோ நிறுவனத்தால் கண்டாவளை அபிவிருத்தி நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தல் மூலம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.முதற் கட்டமாக கடந்த 8ஆம் திகதி கிளி/தம்பிராசபுரம் அ.த.க பாடசாலையில் 50 மாணவர்களுக்கும், கிளி/பிரமந்தனாறு ம.வி. யில் 25 மாணவர்களுக்கும், கிளி/மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலையில் 25 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து இனங்காணப்பட்ட வேறு சில பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (14)

## முன்பள்ளி திறப்பு

வவுனியா பன்றிக்கெய்த குளம் நாவலர் முன்பள்ளித் திறப்பு விழா கடந்த 7ஆம் திகதி காலை10.00 மணியளவில் வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் க.இராசரெத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

## ஆங்கில மொழிப் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கல்

(முல்லைத்தீவு)

மனிதவள அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லை. மாவட்ட அரச அதிபரின் ஒத்துழைப்புடன் கச்சேரி திட்டமிடல் பணிப்பாளர்



குணசிங்கத்தின் மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழனன்று பிற்பகல் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கிய ஆசிரியர் சாந்தரூபன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை கச்சேரி நிர்வாக அலுவலர் இரத்தினராசா, அருட்தந்தை சாரா அடிகளார்,கச்சேரி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிறேசியன் ஆகியோர் ஏற்றினார்கள். வரவேற்புரையினை மாணவி செல்வி.அபிலாமென்சி வழங்கினார்.

ஆசியுரையினை அருட்தந்தை சாரா அடிகளார் நிகழ்த்தினார். கருத்துரையினை கச்சேரி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிறேசியன் வழங்க முதன்மை விருந்தினரான கச்சேரி நிர்வாக அலுவலர் இரத்தினராசா சிறப்புரையினை வழங்கினார்.

தொடர்ந்து 6 மாதங்களாக பயிற்சிபெற்ற 15 மாணவர்களுக்கு சான்றிதழ்களை முதன்மை விருந்தினர் இரத்தினராசா, சொ. அருட்தந்தை சாரா அடிகளார், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிறேசியன், கச்சேரி நிர்வாகப் பிரிவு தட்டெழுத்தாளர் திருமதி. ஜெயந்தி முல்லைத்தீவு ம.வி. உபஅதிபர் திருமதி ஆ.குணநேசன் ஆகியோர் வழங்கினார்கள். (20)

## சமாதான முயற்சிகளைத் தொடரக் கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தை அரசு உணரவேண்டும்

### யோசப் பரராஜசிங்கம் அறிவுறுத்து

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும், வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணவும் இதுவொரு நல்ல தருணமாகும் என்பதை சிறிலங்கா அரசுக்குநாம் நினைவூட்ட விரும்புகிறோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் மனித உரிமைகள் செயலகத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து விட்டுத் திருப்பியபின் அவர் சண்டே ஒப்சேவருக்கு செவ்வி வழங்கிய போதே இவ்வாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் மீளவும் சமாதானப்பேச்சுக்களைத் துரிதப்படுத்தி, சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக இந்நாட்டு மக்களின் நம்பிக்கையை பலப்படுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான முன்னெடுப்புக்களிற்கு உத்தரவாதம் அழித்துள்ளார்கள். அவர்கள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறமாட்டார்கள். எந்தவித சமாதான முயற்சிகளிற்கும் இடையூறான கலவரத்தை ஏற்படுத்த எண்ணவில்லை.

இப்பொழுது வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க இதுஒரு நல்ல தருணம எனத் தாம்அரசுக்கு நினை வூட்ட விரும்புவதாகவும் அவர் கூறினார்.

## தொழில் சார் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோரின் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய, ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும், கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடாத்தி வரும் தொழில்சார் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான முடிவுப்பொருட்கள் கண்



காட்சியாக வைக்கப்பட்டு மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த 09ஆம் திகதி சான்றிதழ் வழங்கும் நிகழ்வோடு ஆரம்பமான இக்கண்காட்சி நேற்றுமுன்தினம் மாலை வரை தொடர்ந்தது. இதில் பெண்களின் செயற்பாட்டில் உருவாக்கிய மரத்தளபாடங்கள், மற்றும் தையல் வேலை மூலம் பூர்த்தி செய்த தைத்த ஆடைகள் என்பன கண்காட்சியாக வைக்கப்பட்டு மக்கள் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் 16பயனாளிகளுக்கு செயற்கை கால் பொருத்தல்

புனர் வாழ்வுச் சங்கத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்துதல் நிகழ்வு கடந்த ( ஆம்,08ஆம் திகதிகளில்



கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைமைச் செயலகத்தில் மன்னார் வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது. இதில் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள சங்கத்தின் 16, பயனாளிகளுக்கு கால் பொருத்தப்பட்டது. 13,பயனாளிகளுக்கு அடுத்த கட்டமாக கால் பொருத்துவதற்கும் அளவுகள் எடுக்கப்பட்டும் உள்ளதென கிளி.ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க நிர்வாக அலுவலர் ஆ.வி. துரைராஜா தெரிவித்தார். (சோ)

# தென்மராட்சி தெற்கு விளை நிலங்களை கையளிக்க படைத்தரப்பு இழுத்தடிப்பு

## எழுத்து மூலம் உறுதியளிக்க நிர்ப்பந்தம்

(வடமராட்சி)

**தென்மராட்சி தெற்கின் அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள ஒரு பகுதி வயல் நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்காக இம்முறை விடுவிப்பதாக யாழ்.படைத்தலைமை அறிவித்துள்ளபோதும் இதனையிட்டு நம்பிக்கையீனம் வெளியிடப்பட்டுள்ளது.**

இதுவரை இவ்விடயம் தொடர்பாக எழுத்து மூலமான உறுதிமொழி ஏதும் தமக்கு வழங்கப்பட்டிருக்கவில்லையென தென்மராட்சி பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டிலும் அப்பகுதிகளை விடுவிக்கவோ, நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடவோ படைத்தரப்பு அனுமதிக்கவில்லையெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இந்நிலையில் படைத்தலைமையின் உறுதியான எழுத்து மூல ஒப்புதல் அறிவிப்பு கிடைக்கப்பெறும் வரை, பயிற் செய்கையிலீடுபடுவது தொடர்பான உறுதிமொழியை விவசாயிகளுக்கு வழங்க முடியாதெனவும் அவ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டின் சொந்த வயல் நிலங்களின் ஆறிலொரு பங்கு பகுதி, படையினரது உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தென்மராட்சி தெற்கு பகுதியில் முடங்கிப் போயிருப்பது குறிப்பிடத்தக்கது. (27)

## கிளைதிறக்க ஏற்பாடு

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கு சுகாதாரமும் உளவியலும் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு டென்மார்க் செஞ்சிலுவைச்சங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான அலுவலகம் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்ட கிளை அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் இயங்கவிருக்கிறது. (28)

# நெல்லியடியில் ஒருபகுதி விவசாய நிலம் படையினரால் மக்களிடம் ஒப்படைப்பு

(வடமராட்சி)

கடந்த எட்டு வருட காலப்பகுதிக்கு மேலாக நெல்லியடிப் பகுதியில் பொதுமக்களது பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த ஒரு பகுதி மேட்டு விவசாய நிலங்களை உரிமையாளர்களிடம் படைத்தரப்பு நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

1996 ஆம் ஆண்டு யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப் பட்டிருந்த வேளை ஆக்கிரமிக்கப் பட்டிருந்த இந்த நிலப்பகுதி,

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த பின்னரும் கூட படையினரால் விடுவிக்கப்படவில்லை.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு என்பவற்றிற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்தே தோட்டக்காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (27)

# யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கு ஜி - 8 நாடுகள் உதவியளிக்க பின்னடிப்பு

## ஸ்திரமற்ற நிலைமையே காரணம்

(யாழ்ப்பாணம்)

சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலைமை காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளுக்கென நிதி உதவி வழங்கும் நாடுகளால் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகளை வழங்க அந்நாடுகள் பின்னிற்பதாகத் தெரியவருகின்றது..

தற்பொழுதுள்ள அமைதியான சூழ் நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு, நடவடிக்கைகள், இடம்பெயர்வுகள், அரசபுறக்கணிப்புக்கள், என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். போதனா வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவிகளை வழங்க ஜி- 8நாடுகள் எனும் உதவி வழங்கும் நாடுகள் முன்வந்தன.

எனினும் இலங்கை அரசியல் தலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அரசியல்குழப்பங்கள் என்பவற்றால் சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பித நிலைமை காரணமாக இவ்வாறு உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகளை வழங்க அந்த நாடுகள் பின்னிற்பதாகத் தெரியவருகிறது. இதனால் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பின்னடைவுகளை சந்தித்திருப்பதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் எதிர் கொள்கின்றனர். (33)

# வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் வறிய மாணவர்களின் நலன்கருதி யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் பல்வேறு உதவித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் உரும்பிராய், கோண்டாவில், கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் உள்ள அகதி முகாம்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்து வரும் வறிய மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

தேசிய எழுச்சிப் பேரவையின் இத்தகைய கற்றல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெருமளவு வறிய மாணவர்கள் பயன் பெற்றிருப்பதாக தெரியவருகிறது. (33)

# தமிழ் இலக்கியவிழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கான தமிழ் இலக்கிய விழா இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொண்டாடப்படவுள்ள இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைக் கல்வித்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பிலான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இதில் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (33)

# விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைப்படுத்தல் வாய்ப்பை ஏற்படுத்துக!

## விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உரிய சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படல் வேண்டுமென யாழ். மாவட்ட விவசாய அமைப்புக்கள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தொகை அதிகரித்து வருகின்ற போதிலும் இவர்களின் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கான சந்தை. வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

இதன் காரணமாக யாழ். குடாநாட்டில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பலத்த நஷ்டங்களை எதிர்கொள்வதால் ஏற்படும் பாதிப்புக்களை சுட்டிக்காட்டியே யாழ். மாவட்ட விவசாய அமைப்புக்கள் பலவற்றாலும் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

## கால்வாய் நோய் அச்சம்

# மாட்டு இறைச்சிக் கடைகள் அனைத்தையும் மூடப் பணிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் மாடுகளுக்கான கால்வாய்நோய் தொற்று ஏற்பட்டிருக்கலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளையும் மறு அறிவித்தல் வரை மூட பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வப்பகுதி உள்ளூராட்சி சபைகளது செயலர்களுடாக மாட்டிறைச்சிக் கடைகளை மூடுவதற்கான உத்தரவை பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிறப்பித்துள்ளார்.

அத்துடன் சட்ட விரோதமாக மாடுகள் இறைச்சிக்காக கொல்லப்படுவதை தடுக்கவும், நோய் தொற்றலுக்குள்ளான மாட்டின் இறைச்சி பாவனையாளர்களை சென்றடையாதிருக்க கடும் நடவடிக்கை எடுக்குமாறும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். (27)

## வீதியை புனரமைக்க நடவடிக்கை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். சங்காணை ஆஸ்பத்திரி வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் இதனூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இவ்வீதி புனரமைப்புச் செய்யப்படாதிருப்பதால் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வலி. மேற்குப் பிரதேசசபைகளிடம் முறைப்பாடு செய்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. (33)

# வல்லைப் பாலப்பகுதியில் சுண்ணக்கல் அகழ்வு விவசாய நிலங்கள் உவராகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வல்லை வெளிப் பாலத்தைச் சூழவுள்ள பகுதிகளில் சட்ட விரோதமாக சுண்ணக்கற்களும், மணலும் அகழப்பட்டு வருவதனால் இதனை அண்மித்துக் காணப்படும் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுள் கடல் நீர் புகுந்து விடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. மேற்படி, பாலப்பகுதியில் படையினர் மற்றும் பொலிசார் தினமும் காவற்கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இவர்கள் சட்டவிரோதமாக மண் மற்றும் சுண்ணக்கற்களை அகழ்வோருக்குத் துணைபோகும் விதத்தில் செயற்பட்டு வருவதாக பலராலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

படையினரின் இச்செயற்பாட்டால் அச்சுவேலி, நவக்கிரி, ஆவரங்கால் போன்ற பகுதிகளில் உள்ள பயன் தருசு விளைநிலங்களுள் உவர் நீர், புகுந்து விடக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. (33)

# குருநகரில் வடிகால்கள் புனரமைக்கவில்லை தொற்றுநோய் பரவலாமென மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் பிரதேசத்திலுள்ள கழிவு நீர் வடிகால்கள் பல நீண்ட காலமாக சேதமடைந்த நிலையிலுள்ள போதும் சம்பந்தப் பட்டோர் கவனிக்காதிருப்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கழிவு நீர்கள் வழிந்தோட முடியாத நிலையில் வடிகால்களினுள்ளேயே தேங்கி நின்று அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதிகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது.

இது தொடர்பாக சுட்டிக்காட்டும் அப்பகுதி மக்கள் யாழ். மாநகர சபையினரிடம் பல தடவை கோரிக்கைகளை விடுத்துள்ளபோதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாநகர சபையினரது இத்தகைய அலட்சியப் போக்குகள் குறித்து அப்பகுதி மக்கள் தமது கண்டனத்தையும், கவலையையும் தெரிவித்துள்ளனர். (33)

# இராணுவ ஆக்கிரமிப்புக்குள் நடைப்பிணங்களாக வாழும் மண்டைதீவு மக்கள்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அச்சுறுத்தல்களால் பேச்சு சுதந்திரம் உட்பட அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் நடைப்பிணங்களாக மண்டைதீவுப் பகுதி மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

கடந்த 07-07 -2004 ஆம் நாள் யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களை சந்தித்துவிட்டு திரும்பிய பின்னர் தமது விஜயம் தொடர்பாக தகவல் தந்த அவர்மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 7ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதனும், சிவனேசனும் நானும் இணைந்து மண்டைதீவு சென்றதாக கூறிய அவர்" நாம் செல்லும் போது மண்டைதீவின் நுழைவாயிலில் 45 நிமிடத்துக்கு மேல் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டோம். பின்னர் பலவாறான விசாரணைகளின் பின்பே அனுமதிக்கப்பட்டோம்.

மேலும் அங்கு சென்று மக்களுடன் கதைத்துக் கொண்டிருந்த வேளை இராணுவத்தினர் மக்களிடம் எம்மைப் பற்றிய பலவாறாக விசாரித்து அச்சுறுத்தல்களையும் விடுத்த வண்ணமிருந்தனர். பின் நாங்கள் இராணுவத்தினரிடம் சென்று எம்மைப் பற்றிய விபரமெல்லாம் ஏற்கனவே வழங்கியிருப்பதைத் தெரிந்த பின்னரே அங்கிருந்து சென்றனர்.

மேலும் அங்குள்ள மக்கள் குடிநீர் வசதியற்ற நிலையிலும், ஏனைய அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் வாழ்கின்றனர். சமாதான சூழல் ஏற்பட்டஇந்த காலப் பகுதியிலும் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான மற்றும் தொழிலை சுதந்திரமாக செய்வதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நாம் இதற்கு முன்பு ஒரு தடவை அங்கு சென்றபோது குடிநீர் தொடர்பாக அப்பகுதி அரச அதிபரிடம் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்போது தண்ணீர் தாங்கி ஒன்று கொண்டு வரப்பட்டு, நீர் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே தொடர்ந்து நாங்கள் அப் பகுதிக்குப் பயணம் செய்து அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

> சமாதானசூழல் ஏற்பட்டஇந்தகாலப் பகுதியிலும் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான மற்றும் தொழிலை சுதந்திரமாக செய்வதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை மண்டைதீவுக்குச் சென்று திரும்பிய பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தகவல் தருகையில். மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தை அண்டிய பகுதியில் 350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால் இவர்கள் குடிசைகளிலேயே குடியிருக்கின்றனர். இவர்களின் நிரந்தர பெரிய வீடுகளை இராணுவத்தினர் கைப்பற்றி குடியிருந்து வருகின்றனர். மேலும் விவசாயத்தையும், மீன் பிடியையுமே தொழிலாகக் கொண்ட இம்மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் உப்புநீர் விவசாய நிலங்களுக்கு வராது கட்டப்பட்டிருந்த அணை உடைவுக்குள்ளாகியுள்ளது. இங்குள்ள மக்களுக்கு மலசல கூடவசதிகள் எதுவும் இல்லை. பெண்கள் உட்பட அனைவருமே காடுகளிலேயே மலம் கழித்து வருகின்றனர். இதன் போதும் இராணுவத்தினர் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

> மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தை அண்டிய பகுதியில் 350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஆனால் இவர்கள் குடிசைகளிலேயே குடியிருக்கின்றனர். இவர்களின் நிரந்தர பெரியவீடுகளை இராணுவத்தினர் கைப்பற்றி குடியிருந்து வருகின்றனர்.

குடிநீருக்கு அல்லைப்பிட்டி பகுதிக்குச் செல்லவேண்டியுள்ளது. இதற்கும் குறுகிய தூரப் பாதையினை இராணுவத்தினர் பயன்படுத்தத் தடை விதித்திருப்பதனால் பல கிலோ மீற்றர்கள் தூரம் சுற்றிச்செல்ல வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை இடித்துத் தரை மட்டமாகக் காணப்படுகின்றது. இதனால் மருத்துவத்திற்காக மக்கள் யாழ்ப்பாணத்திற்கே வர வேண்டியுள்ளது. இங்குள்ள மக்கள் நான்கு விதமான அடையாள அட்டைகளுடனேயே வாழ்கின்றனர்.

கடலில் தொழில் செய்ய ஓர் அடையாள அட்டை, தரையில் வாழ்வதற்கு ஓர் அடையாள அட்டை, மீனவர் திணைக்களத்தின் அடையாள அட்டை சிறிலங்கா தேசிய அடையாள அட்டை என பலவகை அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.புதிதாக அங்கு செல்வோரின் வீடுகள் இராணுவத்தினரால் பலதடவைகள் சோதனையிட்டு விசாரணைகள் செய்யப்படுகின்றன.

மக்களின் பிரச்சினைகளை உதவி அரசாங்க அதிபர்கள் அரச அதிபருக்கு தெரியப் படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.மேலும் இப்பகுதிக்குச் செல்லும் நுழைவாயிலில் உயர் பாதுகாப்பு வலயமென குறிப்பிடப்பட்டிருப்பதால் உதவி வழங்கக்கூட எந்தவொரு அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வருவதில்லை, இங்கு மீன்பிடி பிரதான தொழிலாக இருப்பதனால் படகுகளைக் கரையில் கட்டுவதற்கான ஏற்ற இடம் இல்லை. எனவே இவர்களின் படகுகள் காற்றின் தாக்கத்தினால் உடைவுக்குள்ளாகி வருகின்றன. படகு கட்டும் இடத்தில் இராணுவத்தினர் முகாமிட்டுடிருப்பதும் குறிப்பிடத்தக்கது.எனவே இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தாம் கூடிய அளவு முயற்சி எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேர்காணல்
இ.சசிக்குமார்

# தமிழர் தாயகத்தின் அபிவிருத்தி இ.த.அ.சபை மூலமே சாத்தியமாகும்


## பாராளுமன்ற உறுப்பினர் அரியேத்திரன்

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகத்தை அபிவிருத்தியின் மூலம் கட்டியெழுப்ப வேண்டுமானால் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைமூலமே மேற்கொள்ள இயலுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியேத்திரன் தெரிவித்தார்.

பளுகாமத்தில் கடந்த சனியன்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், வடகிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாம் அபிவிருத்தியடைய முடியும்இதனையே நாம் வலிறுத்தி வருகிறோ மென அவர் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி இந்து ஆரம்பவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஆரம்பக்கல்வி கற்றல் உபகரணக் கண் காட்சியினை படத்தில் காணலாம். (படம்: சோதி)

# மாவீரர் படிப்பகத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மாவீரர் படிப்பகத்திற்கான புனரமைப்பு நிர்வாகத் தெரிவிற்கான ஒன்று கூடல் கடந்த சனியன்று மாலை இடம் பெற்றது. ஒன்றுகூடலில் முல்லை. மாவட்ட தே.எ.பேரவைப் பொறுப்பாளர், உடையார் கட்டு வடக்கு, தெற்கு கிராம அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், போராளிகள் உ.வடக்கு கிராம அலுவலர், தே.எ.பேரவையினர், மக்கள் ஆகியோர் கலந்திருந்தனர்.

நிகழ்வில் கருத்துரையை முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சின்னண்ணை வழங்கினார்.

புனரமைப்பு நிர்வாகத்தின் தலைவராக தாசீஸ், உபதலைவர் செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர் சுபாசினி, பொருளாளர் றமனேந்திரன், உபசெயலர் விஜயகுமார் ஆகியோரும் ஜெயராஜா, சிவரஞ்சன், திருமதி .அருளம்பலம், கிருஸ்ணாயினி நிர்வாக அங்கத்தவர்களாகினர். (19)

# பெற்றோல் கொள்கலன் தீப்பற்றி வெடித்ததில் பரபரப்பு

(மட்டக்களப்பு)

கல்முனையில் பெற்றோல் கொள்கலன் ஒன்று தீப்பற்றி வெடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இரண்டு பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகி கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தனியார் காணி ஒன்றைத் துப்புரவுசெய்த வேளை எரிந்து கொண்டிருந்த குப்பையினுள் சிறிதுபெற்றோலுடன் காணப்பட்ட இறப்பர் கலன் ஒன்றைத் தூக்கி வீசிய வேளை அது தீப்பற்றி வெடித்துச் சிதறியதாகத் தெரியவருகிறது.

# மின்சாரம்பெற்ற நால்வருக்கு அபராதம்

கடந்த 9ஆம் திகதி இரவு வங்காலை கிராமத்தில் களவாக மின்சாரம் எடுத்த நான்கு இளைஞர்களை மன்னார் பொலிசார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.நான்கு இளைஞர்களும் நேற்று மன்னார் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டபோது மன்னார் நீதிபதி அப்துல்லா ஒவ்வொருவருக்கும் தலா 10,000 ரூபா தண்டப்பணமாக தீர்ப்பளித்தார். இத்தண்டப்பணத்தில் முதற்கட்டமாக 10,000 ரூபாவை செலுத்தும் படியும், மீதி9000 ரூபாவை அடுத்த மாதம் செலுத்த வேண்டும் எனக் கூறி நான்கு இளைஞர்களையும் பிணையில் செல்ல அனுமதித்தார். (மி)

# குறைந்த செலவில்அதிக விளைச்சல் சிறு தானிய உற்பத்தியாளருக்கு பயிற்சி

(மல்லாவி)

வவுனிக்குளம் 2004ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை திட்டத்தின் கீழ் சிறுதானிய செய்கையை மேற்கொண்ட பயனாளிகளுக்கு குறைந்த செலவில் அதிக விளைச்சலை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் பயிற்சி வகுப்பு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.சிறுதானிய செய்கையை மேற் கொண்ட பிள்ளையார் வாய்க்கால் பகுதி விவசாயிகளுக்கு வளநகர், கமக்காரர் அமைப்புத்தலைவர் கு.செல்வநாயகம் தலைமையில் இந்த வகுப்புகள் இடம் பெற்றன.

கருத்துரைகளை முல்லை. மாவட்ட பாடவிதான உத்தியோகத்தர் ஜெராட்,துணுக்காய் பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி.கு.சிவபாலன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பிரதேச இணைப்பாளர் கு.சசிக்குமார் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து விவசாயிகளுடன் அவர்களுக்கு சொந்தமான பயிர்களைப் பார்வையிட்டு ஏற்பட்ட நோய்த்தாக்கங்களுக்கான தீர்வுகளை உடனுக்கு உடன் வழங்கி உற்சாகத்தை ஊட்டி சிறந்த முறையில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டிய ஒத்துழைப்புக்களை விவசாய திணைக்களமும், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் வழங்கி வருகின்றன. இந்நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். (24)

# அவசர சிகிச்சைப் பிரிவுக்கு உதவி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சிறுவர் சிகிச்சைப் பிரிவை முன்னேற்றும் நோக்குடன் மன்னார் பொது வைத்தியசாலையில் உலக தரிசனம் நிறுவனம் 2004. முதல் 2006 வரை தனது நிதியில் மூன்று இலட்சம் ரூபாவை வழங்கி சிறுவர் அவசரசிகிச்சை தொகுதி ஒன்றும், உணவு உட்கொள்ளும் தொகுதி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.அத்துடன் கடந்த மாதத்தில் அவசரசிகிச்சை சிறுவர் பிரிவுக்கு4 இலட்சம் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் உத்தியோக பூர்வமாக பொதுவைத்தியசாலை அதிகாரியிடம் ஒப்படைக்க பட்டிருந் தமை தெரிநததே.. (மி)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## தமிழீழ தேசிய இளையோர் கால்பந்துப் போட்டி—2004

தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களின் இளையோர் கால் பந்து அணிகள் கலந்து கொள்ளும் கால்பந்து சுற்றுப் போட்டி ஒன்று எதிர் வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

14,17 வயதுக்குட்பட்ட ஆண்களும் 20வயதுக்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளும் இச்சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகள் தற்போது கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்றன.

இரண்டாவது முறையாக நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில் புலம்பெயர்ந்த உறவுகளின் அணிகளும் கலந்து கொள்கின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற சுற்றுப் போட்டியில் சுவிஸில் வாழும் புலம்பெயர்ந்த உறவுகளின் அணிகள் கலந்துகொண்டு தமது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின.

நான்கு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் சுவிஸ் புலம் பெயர்ந்த வீரர்களைக் கொண்ட அணிகளில் 15வயது அணி சம்பியனாகவும் 20, 17 வயது பிரிவு அணிகள் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. 13 வயது பிரிவு அணி அரையிறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது.

20 வயது பிரிவு போட்டியில் மன்னார் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தை சவீகரித்தது.

தாயகத்தில் சிறப்பான கால்பந்து அணி ஒன்றை வெகுவிரைவாக உருவாக்க வேண்டும். என்பதில் குறியாக இருக்கும் தமிழீழ விளையாட்டுத்துறை இதுபோன்ற போட்டிகளை வருடாவருடம் நடத்தி வருவதுடன் இளையோர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் ஒன்றையும் உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி முகாம் கடந்த வாரம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதேவேளை நடைபெறவுள்ள இளையோர் கால்பந்துப் போட்டி தொடர்பான அறிவுறுத்தல் இளையோர் செயற்பாட்டு நிறுவனகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

01.14வயதுக்குட்பட்ட ஆண்கள், 01.01.1991இற்குப் பின் பிறந்தவர்கள், ஆட்டநேரம்-20-05-20 நிமிடங்கள், ஆடுகளம்-90X60 மீற்றர்கள்

02.17 வயதுக்குட்பட்டோர் ஆண்கள்,01.01.1988இற்குப் பின் பிறந்தவாகள், ஆட்டநேரம்-25-05-25 நிமிடங்கள், ஆடுகளம்-100X65 மீற்றர்கள்

03.20 வயதுக்குட்பட்டோர் ஆண்கள் 01.01.1985இற்குப் பின் பிறந்தோர், ஆட்டநேரம்-30-05-30 நிமிடங்கள், ஆடுகளம்-100X65 மீற்றர்கள்

(04.20 வயதுக்குட்பட்டோர் பெண்கள் (7பேர் கொண்ட அணிப் போட்டி) 01-01-1985இற்குப் பின் பிறந்தோர், ஆட்ட நேரம் -20-05-20 நிமிடங்கள் ஆடுகளம் 90X60 மீற்றர்கள்

ஆட்டம் முதலில் இரு குழுக்கள் ஆக்கப்பட்டு லீக் முறையில் நடத்தப்படும் குழுக்களில் முதல் இரு இடங்களையும் பெறும் அணிகள் விலகல் முறையிலான அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். அரையிறுதி ஆட்டங்களிலிருந்து கோல்டன் கோல் முறையிலான சமநிலை உடைப்புக்குரிய மேலதிக 05-05 நிமிடங்கள் வழங்கப்படும் தொடர்ந்தும் சம நிலை காணப்படின் தண்ட உதை மூலமான சமநிலை உடைப்பு மேற்கொள்ளப்படும்.


இப்போட்டிகளுக்கு 15பேர் மட்டுமே விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.இப்போட்டிக்கு தமிழர் தாயகத்தின் 8 மாவட்டங்களின் அணிகளும் புலம் பெயர்ந்த உறவுகளின் அணிகளும் கலந்துகொள்ளும். இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், மாவட்ட உதைபந்தாட்ட லீக், பாடசாலை விளையாட்டுச் சங்கம், மாவட்ட இளையோர் செயற்பாட்டு நிறுவனம் என்பவற்றின் இணைவில் மாவட்ட மட்டத்தில் நிகழ்த்தும் படி எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு அணியுடன் பயிற்றுனர் ஒருவரும் முகாமையாளர் ஒருவரும் மட்டுமே அனுமதிக்கப்படுவர். என்பதை கவனத்திற் கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு திரு.அ. அன்ரன் அன்பழகன் அல்லது விஜி ஆகியோருடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் 021-2285974

---

# விழிப்புணர்வை ஏற்படுத்துமா?

அ.லோகீசன்





கரும்புலிகள் நாளைச்சிறப்பிக்கும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் இணையச் சங்கங்களும் இணைந்து நடாத்திய பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் சிறப்புற நிறைவடைந்தது.

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகள் விளையாட்டு ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது என்றால் மிகையில்லை.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப் போட்டிகளில் கால்பந்து போட்டி சிறப்புப் போட்டியாக நடைபெற்றது. இதில் யாழ் மாவட்ட அணி மன்னார் அணியையும், கிளிமாவட்ட அணி -முல்லைத்தீவு மாவட்ட அணியையும் எதிர்த்து விளையாடின.

இது வெற்றி தோல்விகளை விட முல்லைத்தீவு மாவட்ட கால்பந்து அணியின் தரத்தை ஏனைய மாவட்ட அணிகளின் பலத்துடன் தரம்பிரித்துக் கொள்வதற்கு நல்ல சந்தர்ப்பத்தைஏற்படுத்திக்கொடுத்தது.

இதனைவிட சர்வதேச ரீதியில் இன்றும் புகழ்பெற்று விளங்கும் வீர விளையாட்டுக்களான மல்யுத்தம்,குத்துச்சண்டை, தலகணிச் சமர் என்பன பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியதுடன் மேற்படி விளையாட்டுக்களைத் தமிழீழத்தின் ஏனைய பிரதேசங்களிலும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்திருந்தமை பாராட்டுக்கு ரியதே. மற்றுமொரு சர்வதேச புகழ்பெற்ற விளையாட்டுக்களில் ஒன்றான நீச்சல் போட்டி முல்லைக் கடற்பரப்பில் நடை பெற்றது. இதில் வீரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டமை தமிழீழத்தில் இருந்து சர்வதேசப்போட்டிகளில் கலந்து கொள்ளும் முதல் விளையாட்டு அணியாக நீச்சல் அணி செல்லுமோ என்ற எண்ணப்பாட் டைத் தோற்றுவித்தது.

அந்தளவிற்கு வீரர்களின் ஆர்வமும் நீச்சல் திறனும் அமைந்திருந்தது. எனவே உரியமுறையில் நீச்சலில் ஆர்வமுள்ள வீரர்களை ஒருங்கிணைத்து உரிய பயிற்சிகளை வழங்கி நீச்சல் அணி ஒன்றை உருவாக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாகவுள்ளது.

இதனைவிட இரு பாலாருக்குமான பாரம்பரிய விளையாட்டுக்களும் முல்லை பொது மைதானத்தை ஆக்கிரமித்திருந்தமை சிறப்பம்சமாக அமைந்தது. ஒட்டு மொத்தத்தில் இப்போட்டிகளைச் சிறப்புற நடத்தி முடிக்க ஒத்தாசையாக இருந்தவர்கள் பாராட்டுக்குரியவர்களே.

---

# ஏமாற்றத்தை ஏற்படுத்துமா இரண்டாவது டெஸ்ட்போட்டி?



சிறிலங்கா கிரிக்கெட் அணி அண்மையில் அவுஸ்திரேலியா- டார்வினில் அவ்வணியுடன் நடைபெற்ற முதலாவது டெஸ்ட்போட்டியில்149 ஓட்டங்களால் தோல்வியடைந்தது தெரிந்ததே.

அதன் பின்னர் தற்போது கெயான்ஸ் நகரில் 2 ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறுகிறது. அவுஸ்திரேலியாவில் நடைபெறும் போட்டிகளை எவ்வாறாயினும் சிறிலங்கா வெற்றிகொள்வது கடினமான காரியமே. எனினும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் 4 இன்னிங்சிலும் பெற்ற மொத்த ஓட்டங்கள் 667 ஐ தாண்டவில்லை.

காரணம் டார்வினில் மாரா மைதானம் பந்துவீச்சாளர்களுக்கு மிகச் சாதகமாய மைந்தமை யாகும். அதன்படி ஒரு வீரர் பெற்ற ஓட்டம் சராசரியாக 15 ஆகும்.அப்போட்டியில இரு அணிகளினதும் துடுப்பாட்ட வீரர்கள் தலா 7 பேர் பங்கேற்றிருப்பினும் இவ்வாறானதொரு தலைவிதிக்கு உள்ளானமை மறக்கமுடியாததாகும்.

இதில் அவுஸ்திரேலிய பந்து வீச்சு வீரரான கஸ்ப்பரோவிச் 39 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை தனது டெஸ்ட் வாழ்க்கையில் சிறந்த பெறுபேறாக அமைந்தது. அதுவரை 83 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை அவர் முன்னர் கைப்பற்றியிருந்தார்.

இரண்டாவது இன்னிங்சில் சிறிலங்காவை 162 ஓட்டங்களுக்குள் சுருட்டியமை இவரின் பந்துவீச்சின் திறமையை வெளிப்படுத்தியது.

மேலும் ஒரு சிறப்பம்சமாக சிறிலங்காவின் அறிமுக வீரரான டெஸ்ட்போட் டியிலேயே பெரும் அச்சுறுத்தலா வீச்சில் இரு வீரர்கள்

இங்கு குறிப்பிட வேண்டியவிடயம் லசிதமாலிங்க தனது கன்னி எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு கத்ததிகழ்ந்தார். இவரின் பந்து இன்னிங்சிலும் 6 அவுஸ சுருண்டனர்.

புகழ்பெற்ற முத்தையா முரளிதரன் இப் போட்டிகளில் பங்கு பற்றாத போதும் 207,201 என்ற எண்ணிக்கையில் அவுஸ்திரேலிய அணியை ஆட்டமிழக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். சிறிலங்காவுக் கெதிரான டெஸ்ட் போட்டிகளில் அனைத்து விக்கெட்டுக்களையுமிழக்காமல் போன சந்தர்ப்பம் அவஸ்திரேலிய அணிக்கு ஒன்று மட்டுமே அது காலியில் நடைபெற்ற போட்டி யில்512 ஓட்டங்க ளுக்கு 8 விக்கெட் (Declare) .எனினும் இரண்டாவது போட்டி இன்யும் தறுவாயில் இரு அணிகளுக்கும் முடிவொன்றே கிடைக்கும் என்ற என்பதே றுடன் முடிவடை வெற்றி தோல்வியற்ற நம்பிக்கையை சிறிலங்காவின் துடுப்பாட்டம் ஏற்படுத்தியுள்ள நிலையில் அவஸ்திரேலிய அணி இப்போட்டியில் ஏமாற்றம் அடைந்துள்ளது என்பதே அனைவரினதும் கருத்தாகவுள்ளது.

வடிவேல்

# தற்போதைய சனநாயக முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்

**-தேர்தல் முடிவுகள் குறித்து பல்கலை விரிவுரையாளர் கருத்து**

(கொழும்பு)

**தற்போதைய சனநாயக முறை குறித்து பொதுமக்கள் நம்பிக்கை இழந்திருப்பதை இம்முறை தேர்தல் வெளிப்படுத்துகின்றது என கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் நிர்மலா பெரேரா தெரிவித்துள்ளார்.**

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் சதவீதம் குறைந்துள்ளமை குறித்து கொழும்பில் ஒலிபரப்பாகும் தனியார் வானொலி ஒன்று அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தற்போதைய சனநாயக முறை குறித்து பொதுமக்கள் நம்பிக்கை இழந்திருப்பதை இம்முறை தேர்தல் வெளிப்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். இம்முறை தேர்தலில் அநேகமானோர் வேண்டுமென்றே தங்களுடைய வாக்குகளை நிராகரித்ததாகவும் கள்ள வாக்குகள் போடப்படும் பயத்தின் காரணமாக தமது வாக்குகளைப் பாவித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். 1987 ஆம் ஆண்டில் மாகாண சபை முறைமை ஆரம்பித்த பின்னர் மாகாண சபைகள் மூலம் மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேற்றப்படாமை இவற்றிற்குக் காரணம் எனவும் அவர் கூறுகின்றார். அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் காரணமாக இம்முறை மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கவில்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பிரிவு பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின்படி பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் பின்னடைந்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும், கடந்த பாராளுமன்ற அமர்வின்போது ஏற்பட்ட முறுகல் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மக்கள் ஆணையை உறுதிப்படுத்துகின்றன

**சிறிலங்கா சனாதிபதி தெரிவிப்பு**

ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலமாக கூட்டமைப்புக்குக்கிடைத்த மக்கள் ஆணையை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மீண்டும் உறுதிப்படுத்தியிருப்பதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு குறுகிய காலத்தில் இந்த வெற்றி கிடைத்திருப்பதாக மாகாண சபைத் தேர்தல் வெற்றியை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் ஏழு மாகாணங்களது ஆட்சிப் பொறுப்பு கூட்டணியிடம் சேர்ந்திருப்பதாக சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தல் முறைமையின் மூலமாக பாராளுமன்ற அதிகாரம் என்ன வகையாக அமைகின்ற போதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு உரிய அதிகாரம் இருப்பது இம்முறை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாக சனாதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள ஆணை தொடர்பான யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் தாம் கோருவதாகவும் சனாதிபதி கேட்டுள்ளார். எந்த வேலைத் திட்டங்களுக்கு அல்லது அரசாங்க கொள்கைகளுக்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளது என்பது இந்தத் தேர்தலின் மூலமாக தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எனவே சகலவிதமான வாதப் பிரதிவாதங்களையும் கைவிட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது இன்று அவசியம் என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில்: ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் மூலமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாகாணசபைகளுக்கான தேர்தலில் ஆறு மாகாணங்களில் கூட்டமைப்பு வெற்றி பெற்றதன் மூலமாக இது உறுதிப்படுத்தப்பட்டதாகும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். கரை புரண்டோடும் ஆற்று நீரை தடுத்து நிறுத்த முடியாது என்று முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தெரிவித்த கூற்று மாகாண சபைத் தேர்தலின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் சுட்டிக்காட்டினார். இன்றைய சூழ் நிலையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு வகுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை தொடர்வதற்கு நாட்டு மக்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் தோன்றியிருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# சொகுசு வாகனத்தில் இருந்து வர்த்தகரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

வெட்டுக்காயங்களுடன் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் சடலம் சிறிலங்காப் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

கோடீஸ்வர வர்த்தகரானசரத் விமலரத்ன என்பவரின் சடலமே நேற்று முன்தினம் நண்பகல் வெள்ளவத்தை டபிள்யூ.ஏ சில்வா மாவத்தையில் வைத்து மீட்கப்பட்டது.

வாகனத்திற்குள் இருந்து மீட்கப்பட்ட சடலத்தில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டதாகக் கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நண்பகல் தனது இல்லத்தில் இருந்து வெளியேறிய சரத் விமலரத்ன இரவாகியும் வீடு திரும்பாததை அடுத்து அவரது மனைவி பொலிசாருக்கு முறைப்பாடு செய்தார். இதையடுத்து பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் தலை பொலித்தீன் உறையினால் மூடப்பட்டிருந்தது. குறித்த மோட்டார் வண்டி கைரேகை நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டது.

## ஆயுதத்துடன் கைது

மாகாணசபைத் தேர்தல் வாக்குகளைக் கணக்கிடும் கொழும்பு அலுவலகத்திற்கு ஆயுதம் சகிதம் வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தேர்தல் நடைபெறும் எந்த ஒரு இடத்திலும் ஆயுதத்தை எவரும் வைத்திருக்க முடியாது என்ற நிலையில் இவர் ஆயுதத்தை வைத்திருந்தமை தொடர்பில் விசாரணைகள் நடைபெறுகின்றன. (32)

# தேசிய பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின்சகல தேசியப்பாடசாலைகளிலும் கல்வித்தரத்தை மேம்படுத்தும் திட்டமொன்றை சிறிலங்கா கல்விஅமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் 324 தேசியப்பாடசாலைகள் இயங்குகின்றன. ஆனால் 50 பாடசாலைகளில் மட்டுமே தமது பிள்ளைகளை அனுமதிப்பது குறித்து பெற்றோர் கூடுதலான ஆர்வம் காட்டி வருகின்றனர். எஞ்சிய பாடசாலைகளில் பௌதீக ஆளணி வளங்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாக கூறப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் தமது கல்விக் கூடங்களை எவ்வாறு சிறப்பாக மாற்றுவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

# அரசியல் பழிவாங்கலினால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

**-மிலிந்த மொறகொட கருத்து**

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கலினாலும் மோதல்களினாலும் நாட்டைக் கட்டி எழுப்ப முடியாது என ஐ.தே.கட்சிகளின் முன்னைய அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்நாட்டில் வாழும் சகல மக்களினதும் கருத்துக்களை அறிந்து அதன்படி நடந்தால் எதிர்க்கட்சியும் அரசாங்கத்தில் உதவிகள் வழங்கும் எனவும், அரசியல் கொள்கைகளில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு ஆட்சி நடத்துவதில் அரசாங்கம் இப்பொழுது பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதெனவும் அவர் கூறினார்.

## ஐ.தே.க.வை மறுசீரமைக்க முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியைபுனரமைக்க புதிதாக இளைஞர்களை சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

தேர்தலில் தோல்வி ஏற்பட்டதைத் தொடர்ந்து கட்சியில் பிரமுகர்கள் விரக்தியடைந்துள்ள நிலையில் அதிலுள்ள இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து கட்சியை புனரமைக்க முடியுமென ரணில் எதிர்பார்ப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சமஷ்டி ஆட்சி முறை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசாதீர்

**-தேசிய பல்கலை பேராசிரியர் சங்கம் அறிவுரை**

(கொழும்பு)

வடகிழக்கு சமஷ்டி ஆட்சி முறை சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டாம் எனத் தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

சமஷ்டி ஆட்சி முறைக்கு பதிலாகக் கடைசித் தீர்வு ஒன்றினை எட்டுவதற்கு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் எனவும் சமஷ்டி ஆட்சி முறை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு சமமானதாகும் என பேராசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் சந்தன அபேரத்தின தெரிவித்துள்ளார்.

# தற்போதைய அரசு மூன்று மாதங்கள் ஆட்சியிலிருந்தால் யுத்தம் வெடிக்கும்

**முன்னாள் அமைச்சர் ஆரூடம்**

(கொழும்பு)

தற்போதைய அரசு இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் நாட்டில் ஆட்சி நடத்தினால் மக்கள் பட்டினிச்சாவைஎதிர் நோக்குவதுடன் மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு இடம் உண்டு என முன்னைய காணி அமைச்சரும், களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர். ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ரக்வானையில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சி கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றதென்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

# வாகனக் கொள்ளையிலீடுபட்ட இராணுவச் சிப்பாய் கைது

(கொழும்பு)

வாகனக் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்ற புதன் வத்தளைப் பொலிசார் ஹொர்தலயில் நடாத்திய திடீர் சோதனையொன்றின் போதே இச் சிப்பாய் அகப்பட்டார். அத்துடன் 'டபிள்கப்' வாகனமொன்றும் முச்சக்கரவண்டியொன்றும் கைப்பற்றப்பட்டன.

இச் சிப்பாய் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய கொள்ளையர்கள் தப்பியோடி விட்டதாகவும், விசேட அணியொன்று இது தொடர்பான விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் வத்தளைப் பொலிசார் கூறியுள்ளனர்.

# சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க சனாதிபதியுடன் நோர்வேத் தரப்பு ஆராயும்

**-சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தகவல்**

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து சனாதிபதிக்கும், நோர்வேத் தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளதாக சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் சமாதான நிலைப்பாட்டுக்கு நடந்து முடிந்துள்ள மாகாணசபைத் தேர்தல் மூலம் மக்கள் பூரண ஆதரவை வழங்கியிருப்பதாகவும் சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அடுத்த கட்டமாக சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்க வேண்டியதே அரசாங்கத்தின் எஞ்சியுள்ள பணியெனவும், இதன் ஒரு அங்கமாகவே சனாதிபதிக்கும், நோர்வேத் தரப்பினருக்கும் இடையிலான இச்சந்திப்பு அமையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சனாதிபதிக்கும் நோர்வேத் தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு எப்போது நடைபெறும் என்பது தொடர்பான விபரங்கள் குறித்து எதுவிதக் கருத்துக்களையும் அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

# வரவு – செலவுத்திட்டம் நிறைவேறுவதைத் தடுக்க இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு

**தொலைத்தொடர்பு, இன்சூரன்ஸ், பயணிகள் விமானப்போக்கு வரத்து ஆகிய துறைகளில் அன்னிய நேரடி முதலீட்டு வரம்பு இந்திய மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் உயர்த்தப்பட்டுள்ளதையடுத்து அதைப் பாராளுமன்றில் நிகழவிடாது தடுக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை முடிவுசெய்துள்ளன.**

"உயர்த்தப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு உச்ச வரம்பை வாபஸ் பெற வேண்டும். இல்லை யெனில் நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டை நிறைவேற்ற விடாமல் தடுப்போம்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும் சி.ஐ.டி.யூ தொழிற்சங்கத் தலைவருமான எம்.கே.பாந்தே ஞாயிற்றுக்கிழமை கூறினார். ஆனால் அக்கட்சியைச் சேர்ந்த மற்றொரு தலைவரான சீதாராம் யெச்சூரி, "காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற் போக்குக், கூட்டணி அரசுக்கு அளித்துவரும் ஆதரவை வாபஸ் பெற மாட்டோம்" என்று தெரிவித்தார். நிதி மசோதாவை நாடாளுமன்றத்தில் எதிர்ப்பீர்களா என்று நிருபர்கள் கேட்டதற்குப் பதில் அளிக்க மறுத்துவிட்டார். "நிதி மசோதாவில் என்ன திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுடன் விவாதிப்போம்" என்றார் யெச்சூரி. தொலைத் தொடர்புத் துறையில் இதுவரை அந்நிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு 49%ஆக இருந்தது. அது 74 வீதமாக அதிகரிக்கப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்துத் துறையில் இப்போது 40 சதவீதமாக இருக்கும் அன்னிய முதலீட்டு வரம்பு 49 சதவீதமாகவும், இன்சூரன்ஸ் துறையில் 26% ஆக இருக்கும் உச்ச வரம்பு 49% ஆகவும் உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எம்.கே.ப்ாந்தே, நிருபர்களிடம் கூறியதாவது நாங்கள் தனியார் மயமாக்கலுக்கு எதிரானவர்கள். அந்நிய நேரடி முதலீட்டு உச்ச வரம்பு அதிகரிக்கப்பட்டிருப்பதை நாடாளுமன்றத்தில் நாங்கள் எதிர்ப்போம். அதை உயர்த்துவது குறித்து மார்க்சிஸ்ட் கட்சியுடன் விவாதிக்கவில்லை. உலகில் எந்த நாட்டிலும் தொலைத் தொடர்புத் துறையில் அந்நிய முதலீடு 25 சதவீதத்திற்குமேல் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், இந்தியாவில் தொலைத் தொடர்புத்துறையின் மீதான கட்டுப்பாட்டை முற்றிலும் வெளி நாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைப்பது தேச விரோத நடவடிக்கையாகும். ஒரு போதும அதை எமது கட்சி ஆதரிக்காது.

அதேபோல, இன்சூரன்ஸ், விமானப் போக்குவரத்துத்துறை ஆகியவற்றில் நேரடி அந்நிய முதலீட்டு வரம்பை அதிகரித்து இருப்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. "அனைத்து அரங்குகளிலும் அதை எதிர்ப்போம். நிதி மசோதாவுக்கு வெட்டுத்தீர்மானம் கொண்டுவர மாட்டோம்'' என்று நாங்கள் ஒரு போதும் கூறவில்லை. சில நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு வெட்டுத் தீர்மானம் கொண்டுவருவது ஒரு வழி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நாடாளுமன்றக் கட்சி அது குறித்து விவாதித்து முடிவு எடுக்கும் அந்த முடிவை மாற்றிக் கொளவது குறித்து ஐக்கிய முற் போக்குக கூட்டணித் தலைவர்களுடன் பேசுவதற்கும் வாய்ப்பு உள்ளது. எமது ஆதரவு இல்லாமல் அரசு பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியாது. எனவே எங்களது கருத்துக்கும் அரசு காது கொடுக்கவேண்டும். அரசுக்கு வேண்டுகோள் விடுப்பது, விவாதிப்பது, அதேநேரத்தில் எமக்கு ஆதரவாக மக்கள் கருத்தைத் திரட்டுவது என்று இரு நடவடிக்கைகளிலும் இறங்குவோம். குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை அரசு கடைப்பிடிக்க வேண்டும். இல்லையெனில் கூட்டணியின் ஒற்றுமைக்குப் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்றார் பாந்தே.

# பொடோ சட்டத்தை இரத்துச் செய்யக்கூடாது

### – இந். எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி

பொடோ சட்டத்தைத் திரும்பப் பெறக்கூடாது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் துணைப்பிரதமருமான எல்.கே. அத்வானி கூறினார். பெங்களூரில் ஞாயிற்றுக் கிழமை நடந்த பா.ஜ.க பொதுக் கூட்டத்தில் அத்வானி பேசியதாவது தீவிரவாதிகளை ஒழுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட பொடோ சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெறக்கூடாது. இந்தச் சட்டம் மூலம் நாட்டில் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

# கம்யூனிஸ்டுக்களை சமாதானப்படுத்துவோம்

### - நிதி அமைச்சர் ப.சிதம்பரம்

அந்நிய நேரடி முதலீட்டின் அளவை உயர்த்தி இருப்பது தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி சமாதானப்படுத்துவோம் என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது அந்நிய நேரடி முதலீடு தொடர்பாக இடதுசாரிகளுடன் கலந்து பேசிச் சமாதானப்படுத்த முயற்சி எடுப்போம். இது நாட்டுக்குத் தேவை என்று நான் நினைக்கின்றேன். பிரதமர் நினைக்கிறார்; அரசு நினைக்கிறது. இதற்கான நியாமான வாதங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை எடுத்துச் சொல்லி சமாதானப்படுத்துவோம்.

# குரிஷோ நீர்மின் திட்ட அணையில் உடைப்பு அசாமில் வெள்ளம்13 பேர்உயிரிழப்பு

### - 25 இலட்சம் மக்கள் பாதிப்பு

கடுமையான மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நாட்டின் பிற பகுதிகளுடன் அசாம் துண்டிக்கப் பட்டுள்ளது.

திரிபுரா,மிசேரம், பீகார், மா நிலங்களும் வெள்ளத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. 25இலட்சம் பேர் பாதிக்கப்படடுள்ளனர். பீகாரிலுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். மீட்புப்பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.



பூடான் சாடிட்ஸ ஏரியில் அமைந்துள்ள குரிஷோ நீர்மின் திட்ட அணையில் சனிக்கிழமை மாலை உடைப்பு ஏற்பட்டதை அடுத்து கீழ் அசாம் பகுதியில் பெருமளவான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் சாலை, ரயில் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன.

மாநிலத்தில் வெள்ளம் காரணமாக இதுவரை 13பேர் இறந்தனர். அசாம், பீகார் மாநில முதல்வர்களுடன் பேசிய பிரதமர் மன்மோகன்சிங் தேவையான அனைத்து உதவிகளை யும் செய்வதாக உறுதி அளித்தார்

அசாம் உள்ளிட்ட வடக்கு மாநிலங்களிலும் பீகாரிலும் மேற்குவங்கத்திலும் தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.


## இதய அஞ்சலி



தாயின் மடியில் 22 ◻ 09 ◻ 1975

மண்ணின் அடியில் 11 ◻ 07 ◻ 2004

## தேவராசா உதயகுமார்

யாழ்பல்கலைக்கழக வணிகபீட இறுதியாண்டு மாணவன்

நேற்று நீ எம்மோ டிருந்து
நேர்த்தியாய் பணிகள் செய்தாய்
போற்றுதற் குரியதாய் மண்ணில்
புகழுடன் வாழ்வாய் என்றும்
பற்றுடன் கற்ற கல்வி
பாதியில் இறுதி யாச்சோ
வெற்றுட லாகி விபத்தில்
வீதியில் வீழ்ந்து விட்டாய்
"போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு
இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது"
என்ற தேசியத்தலைவரின் சிந்தனையினை ஏற்று
தேசத்தின் விடுதலைக்காய் நீ
தேடியே பணிகள் செய்தாய்
மாசற்ற மாணவ மணியே நீ
மறைந்தது சோகம் தானே

அமரரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

(4807) தமிழீழ மாணவர் அமைப்பு


# பெண் சித்திரவதை விசாரணைக்கு ஆணை

குப்வாரா மாவட்டம் ஹந்து வாரா பகுதியில் பொலிஸ் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளம் பெண் பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்த ஜம்மு-காஷ்மீர் அரசு உத்தரவிட்டுள்ளது. இதனிடையே, அந்த பகுதிக்கு உட்பட்ட டி.எஸ். பி,சப்-இன்ஸ்பெக்டர் இருவரும் டி.ஐ.ஜி அலுவலகத்துக்கு விசாரணை முடியும் வரைக்கும் மாற்றப்பட்டுள்ளனர். கடந்த வாரம் 16 வயது மாணவி, பொலிஸ் நிலையத்தில் விசாரணையின் போது சித்திரவதை செய்யப்பட்டாராம். இது தொடர்பாக அந்தப் பகுதியில் 3 தினங்களாக ஆர்ப்பாட்டம் நடந்தது. குற்றம் இழைத்தோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று டி.ஐ.ஜி அசோக் குப்தா தெரிவித்தார்.

# துரைமுருகனுக்கு நீதிமன்று கட்டளை

வருவாய்க்கு அதிகமாக சுமார் 15 கோடிரூபாய் சொத்துக் குவித்த வழக்கின் விசாரணைக்காக தி.மு.க. வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் துரைமுருகன் அடுத்தமாதம் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி குற்றப்பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென வேலூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த துரைமுருகன் தனது மனைவி, மகன், மருமகள் ஆகியோரது பெயரில் வருவாய்க்கு அதிகமாக சுமார் 15 கோடிரூபாய் சொத்து குவித்திருப்பதுபற்றி வேலூர் லஞ்ச ஒழிப்பு பொலிசார் வழக்குப்பதிவு செய்திருந்தனர்.இந்த வழக்கு விசாரணை வேலூர் நீதிமன்றத்தில் நடைபெற்ற போதும் அவர் இவ் விசாரணைகள் எதிலும் ஆஜராக வில்லை. இதனையடுத்தே நீதிபதி துரைமுருகன் உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டுள்ளார்.


## மணமகள் தேவை



லண்டனில் வசிக்கும் 29 வயதுடைய R.C ரோமன் கத் தோலிக்க மதத்தைச்சேர்ந்த நல்ல நிற முடைய சராசரி உயரமான (B.A, (CONMIC,CIMA) பட்டதாரி வாலிபருக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏதோ ஒன்றில் நிரந்தர குடியுரிமையுடன் பண்புள்ள படித்த மணமகள் தேவை.

மணமகன் பெற்றோர் முகவரி:-
நிஷா தொலைத் தொடர்பகம்,
கண்டிவீதி-மிருசுவில்
தொலைபேசி இலக்கம்
077777-5503
60221-2378


மணமகன் லண்டனில் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

07818651154
07751467439

(சி-10017)

### கெயின்ஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# 2ஆவது இனிங்ஸிலும் அவுஸ். சிறப்பு துடுப்பாட்டம் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி





சிறிலங்கா அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் கெயின்சில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்றைய ஆட்ட நேரமுடிவின் போது அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் போட்டி நிறைவடைந்த போது 5 விக்கட்டுக்களை இழந்து 416 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிறிலங்கா, அதன் இறுதி ஐந்து விக்கெட்டுகளையும் 44 ஓட்டங்களுக்கு இழந்தது.

ரொமேஸ்களுவிதாரண நேற்று 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஓட்ட எண்ணிக்கை 445 ஆக இருந்தபோது 7 ஆவது விக்கெட்டாக திலான் சமரவீர 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் உபுள் சந்தன 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லசித் மாலிங்க ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். இறுதியில் 455 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் சிறிலங்கா அணி இழந்தது.


பந்து வீச்சில் கிளெஸ்பி, ஷேன்வோர்ன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் மெக்ராத் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் லஸ்ரின் லாங்கர் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மொத்த ஓட்ட எண்ணிக்கை 105 ஆக இருந்தபோது அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆட்டம் நிறைவடையும் போது மத்யூ கெய்டன் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் டேமியன் மாட்டீன் 52 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் நுவான் சொய்ஸா கைப்பற்றினார்.இதன்படி சிறிலங்கா அணியைவிட 256 ஓட்டங்கள் முன்நிலையில் உள்ளது அவுஸ்திரேலிய அணி.

## கெயின்சில் பெற்ற சதமே டெஸ்ட் வாழ்க்கையில் பெறுமதிமிக்கது

### மாவன் அத்தப்பத்து



கெயின்சில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக தான் பெற்ற சத ஓட்டங்கள் தமது டெஸ்ட் வாழ்க்கையில் பெறுமதிமிக்க ஓட்டம் என சிறிலங்கா அணித்தலைவர் மாவன்அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

மாவன் அத்தப்பத்து நேற்று முன்தினம் தனது டெஸ்ட் வாழ்க்கையில் 15ஆவது சதத்தை பெற்றுக் கொண்டார்.

நேற்று முன்தினம் போட்டி ஆரம்பித்த போது 318 என்ற பொலோவான் ஓட்டங்களைப் பெறும் நோக்கத்துடன் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அத்தப்பத்து 133 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

## எந்தச் சவாலையும் எதிர் கொள்ள இந்தியக் கிரிக்கெட் அணி தயார்

### எஸ். கே.நாயர்

எந்தச் சவாலையும் எதிர் கொள்ளும் உடல் மற்றும் மனத் திடத்துடன் நமது வீரர்கள் உள்ளனர் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியச் செயலர் எஸ்.கே.நாயர் தெரிவித்துள்ளார்.

ஜூலை16 தொடங்கும் ஆசியக்கோப்பை மற்றும் செப்டம்பரில் இங்கிலாந்தில் நடை பெறும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் தங்களுடைய திறமையை வெளிப்படுத்த நமது வீரர்கள் தயாராகவுள்ளனர். அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்கா அணிகள் இருப்பதால் ஐ.சி.சி சம்பியன் போட்டி சற்றுச் சவாலாகவே இருக்கும் இருப்பினும் ஏற்கனவே உலகச் சம்பியனான அஸ்திரேலியாவை இந்திய அணி வென்றுள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார் அவர்.




## ஜேர்மன் பயிற்சியாளர் பதவியை நிராகரித்தார் கிரீஸ் கால்பந்து பயிற்சியாளர்



ஜேர்மனியின் தேசிய கால்பந்து அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பை நிராகரித்தார் கிரீஸின் பயிற்சியாளர் ஓட்டோ ரெகாஜெல் சமீபத்தில் நடைபெற்ற ஐரோப்பியக் கோப்பைக் கால்பந்து போட்டியில் கோப்பையை வென்ற கிரீஸ் அணிக்குப் பயிற்சியாளராக இருந்தார் ரெகாஜெல்.

ஜேர்மனியைச் சேர்ந்த இவரை ஜேர்மனியின் தேசியக் கால்பந்து அணிக்கு பயிற்சியாளராக இருக்கும் படி ஜேர்மனி கால்பந்து சங்கம் கோரியது. ஆனால் கிரீஸுடன் 2006 உலகக்கோப்பை வரை தன்னுடைய ஒப்பந்தம் உள்ளதால் இப்பொறுப்பை ஏற்க முடியாது என்று ரெகாஜெல் மறுத்துள்ளார். ஜேர்மனியின் பயிற்சியாளராக இருந்த ரூடிவோலர், ஐரோப்பியக் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு அணி முன்னேறாததால் அப் பொறுப்பிலிருந்து விலகினார்.

## ஒலிம்பிக் : தூர்தர்ஷனில் நேரடி ஒளிபரப்பு

எதென்சில் நடைபெறும் 2004 ஒலிம்பிக் போட்டியை தூர்தர்ஷன் நேரடியாக ஒளிபரப்புகிறது. இதற்கான உரிமையை ரூ.23 கோடியை கொடுத்து பெற்றுள்ளது தூர்தர்ஷன். ஒலிம்பிக் போட்டிகள் ஆகஸ்ட் 13 முதல் 29ஆம் திகதி வரை நடைபெறுகின்றன. இந் நாட்களில் 24மணி நேரமும் போட்டிகள் தூர்தர்ஷனின் விளையாட்டு சேனலில் நேரடியாக ஒளிபரப்பாகும். அதைத் தவிர தினமும் நான்கரை மணிநேரத்துக்கு போட்டிகளின் சாராம்சம் தேசிய ஒளிபரப்பில் ஒளிப்பரப்பப்படும். மொத்தம் 4000மணி நேரம் ஒளிபரப்பப்படும் போட்டிகளை நாட்டில் 40லட்சம் பேர் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 15பேர் கொண்ட குழுவை தூர்தர்ஷன் எதென்ஸிற்கு அனுப்புகிறது.

## எதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றால் ஒரு கோடி ரூபா பரிசு ஜார்க்கண்ட் முதல்வர்

அடுத்த மாதம் நடைபெறும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த வீரர்கள் தங்கம் வென்றால் ரூபா ஒரு கோடி பரிசு அளிக்கப்படும் என்று மாநில முதல்வர் அர்ஜுன் முண்டா அறிவித்துள்ளார். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இப்பரிசுத் தொகை வழங்கப்படும். மாநிலத்தில் விளையாட்டுத்துறையை மேம்படுத்த அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என்றார் அவர்.

## 'றக்பி' நட்சத்திரம் ஜொனி வில்கின்சன் மீண்டும் அணிக்குத் திரும்புகின்றார்

இங்கிலாந்தின் றக்பி நட்சத்திரம் ஜொனி வில்கின்சன் மீண்டும் அணிக்குத் திரும்புகிறார். கடந்த ஏழு மாதகாலமாக கழுத்தில் ஏற்பட்ட காயங்காரணமாக இவர் ஓய்வில் இருந்தார்.

கடந்த நவம்பரில் நடந்த உலகக்கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கெதிராக கடைசி நேரத்தில் கோல் போட்டு இங்கிலாந்துக்கு வெற்றி பெற்றுத்தந்தவரான வில்கின்சன் தற்போது தாம் பூரண குணமடைந்திருப்பதாகவும் இரண்டாவது உலகக்கிண்ண போட்டியை வெற்றி பெற்றிபெற்றுத் தருவதாகவும் வாக்குறுதியளித்துள்ளார்.

அடுத்த உலகக்கிண்ணத்துக்கு முன்பாக பல போட்டிகளில் அவர் பங்கேற்கவுள்ளார். அதன்படி வரும் ஓகஸ்ட் மாதம் அயர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள அவரது "போல்கன் ஜேர்ஸி அணி தயாராகிறது. அதன்பின்னர் அடிடாஸ் நிறுவன ஆதரவுடன் சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய போட்டிகளில் அவரது அணி பங்கேற்கவுள்ளது.

## 2008 ஒலிம்பிக் போட்டி: இளம் ஹொக்கி வீரர்கள் தேர்வு முகாம் தொடங்கியது

2005 ஜூனியர் உலகக்கோப்பை, 2008 ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராகும் வகையில் இளம் ஹொக்கி வீரர்களைத் தேர்வு செய்யும் பணியில் இந்திய ஹொக்கி கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. மூன்று கட்டங்களாக இளம் திறமையைக் கண்டுபிடிக்கும் திட்டம் இம்பாலில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. வரும் புதன்கிழமை வரை இம்பாலில் இதற்கான முகாம் நடைபெறுகிறது. அதையடுத்து முதற் கட்டமாக லக்னோவில் (யூலை 22-24), ராஞ்சியில் (யூலை26-28), ரூர்கேலாவில் (யூலை 30- 31) இம் முகாம் நடைபெறுகின்றது. இரண்டாவது கட்ட முகாம் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறுகின்றது. அதில் மேற்கு, மத்திய தென் மண்டலங்களில் இருந்து இளம் வீரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். 18 வயதுக்குட்பட்ட (யூனியர் உலகக் கோப்பைக்காக) வீரர்களையும், 20வயதுக்குட்பட்ட (2008 பீஜிங் ஒலிம்பிக்) வீரர்களையும் தேர்வு செய்ய இம்முகாம்கள் நடத்தப்படுவதாக இந்திய ஹொக்கி கூட்டமைப்பின் செய்தி ஆலோசகர் அனுபவம் குலாட்டி தெரிவித்துள்ளார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் இளம் வீரர்களுக்கு வரும் செப்டம்பர் முதல் தேசியப் பயிற்சி முகாம் நடத்தப்படும். 2008 ஒலிம்பிக் வரை இப்பயிற்சி முகாம் தொடரும் என்றார் குலாட்டி. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் வீரர்களுக்கு பயிற்சியளிக்க முன்னாள் ஒலிம்பிக் வீரர் ரமன்தீப்சிங், முகேஷ்குமார், ஏர் இந்தியா அக்கடமியின் பயிற்சியாளர் ரொமேஷ் பதானியா ஆகியோர் பயிற்சியாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.



பெரு- அரேகிபாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமக்குரிய இரண்டாவது கால் இறுதியில் மோதும் கொஸ்ராறிக்காவின் அல்வரோ சபோறியோலும் பிரேசிலின் யுவானும். இப்போட்டியில் பிரேசில் 4- 1 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் வட்டக்கச்சி விவசாயப் பெருமக்களால் நடாத்தப்படும். மாபெரும் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி எதிர் வரும் 18ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.


வட்டக்கச்சி கலைவாணி மாட்டு வண்டிச்சவாரித் திடலில் நடைபெறவுள்ள மேற்படி போட்டி அன்று மாலை ஒருமணிக்கு ஆரம்பமாகும் என்று தமிழீழ விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தெரிவுப் போட்டியில் கிளி. அணி வெற்றி

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனம் நடாத்தும் இளையோருக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. லீக் முறையிலான 14 வயதுக்கும், 20 வயதுக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி தெரிவு அணி முதலாமிடத்தினையும், உருத்திரபுரம் தெரிவு அணி இரண்டாமிடத்தினையும், வட்டக்கச்சி தெரிவு அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன. (சோ)



## சிந்தனைக்கு



நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-07-2004
மின் அஞ்சல்
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

## அனாதரவானவர்கள்!

ஈ.பி.டி.பி குழுவின் தலைவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையின் அங்கத்தவருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கு இவ்வாறானதொரு அவலம் நேர்ந்திருக்ககூடாது பேச்சிற்குத் தானும் அவரை அனாதரவானவர் போல் ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தியிருக்கக் கூடாது. அவரின் விசுவாசத்திற்கு இவ்வாறு துரோகம் இழைத்திருத்தல் கூடாது.

கடந்த வாரத்தில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமானது தன்னை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படவிருந்ததொன்று என்பதே டக்ளஸ் தேவானந்தாவின் குற்றச்சாட்டாகும். சிறிலங்காப் பொலிஸாரும் அத்தகைய ரீதியிலேயே விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

ஆனால் இத் தாக்குதலானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட இருந்ததோ, இல்லையோ இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக அரசாங்கத் தரப்பு தெரிவிக்கும் கருத்துக்கள், வெளியிடும் அறிக்கைகள் டக்ளஸ் தேவானந்தாவும் இவ் அரசாங்கத்தில் ஒருவரா? அன்றி அமைச்சரா? என்ற கேள்வியை எழவைக்கின்றது.

ஏனெனில் சிறிலங்காவின் பிரதமர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட பொதுசன ஐக்கிய முன்னணியினர் டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை முயற்சி எனக் கூறப்படும் இச்சம்பவம் அவருடனான தனிப்பட்ட பிரச்சினை என்பது போன்று சிந்திக்க முற்பட்டுள்ளனர். அதுமட்டுமல்ல இது ஒரு பொருட்படுத்தப்படத் தக்க விடயம் அல்ல என்ற ரீதியிலும் அவர்கள் பேசியுள்ளனர்.

இந்நிலையில் தான் டக்ளஸ் தேவானந்தா இவ் அரசாங்கத்தில் பங்கேற்கின்றாரா? அன்றி அமைச்சராக இருக்கின்றாரா? என்ற கேள்வியும், ஒரு அமைச்சர் மீதான கொலை முயற்சி என்பது பொருட்படுத்தத்தக்கதொரு சம்பவம் இல்லையா? என்ற கேள்வியும் எழுகின்றது. இவ்விடயமானது தமிழ்மக்களை பொறுத்து ஆச்சரியம் அளிக்கத்தக்கதொரு விவகாரமாக இல்லாது விடினும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

டக்ளஸ் தேவானந்தாவும் சரி அவர் போன்ற வேறு எந்த இனவிரோதக்குழுக்களின் தலைவர்கள்,தொண்டர்கள் ஆயினும் சரி சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்வாறே நடந்து கொள்வார்கள். ஏனெனில் அவர்களுக்கு இவர்களின் உயிர்களோ, இவர்களோ முக்கியமல்ல. இவர்கள் இருக்கும் வரையில் இனத் துரோகிகளாக காட்டிக் கொடுப்பவர்களாக தமிழ் மக்களுக்கு எதிராகத் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பவர்களாகவும் தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு தேவையானவர்களாயுமிருந்தால் மட்டும் போதுமானதாகும்.

டக்ளஸ் தேவானந்தாவை ஒரு பொருட்டானவராக மதித்தோ அன்றித் தமது தரப்பிலுள்ள ஒரே ஒரு தமிழ் மக்கள் தரப்பு பிரதி என நினைத்தோ ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதானால் டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஓர் பொறுப்பு மிக்க அமைச்சுப் பதவியையாவது வழங்கியிருக்க முடியாதா? ஆனால் ஆட்சியாளர்கள் அவ்வாறு உணர்ந்து கொள்வதில்லை. 'பேருக்கு அமைச்சர்கள்' என்ற நிலையிலே இவர்களை வைத்துக் கொண்டுள்ளனர். இவர்களும் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். ஏனெனில் இவர்களுக்கு அமைச்சர் பதவி என்பதே- எதுவாகிலும் தமது நிலைக்கு மேலானதென்றதொன்றாகிவிடுகின்றது.

இதேவேளை யுத்தத்திலும் சரி, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதும் சரி தமக்கு ஏற்ற விதத்தில் ஆட்சியாளர் (எக்கட்சியினரும் சரி) இவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதாவது யுத்தத்தின் போது காட்டிக் கொடுப்பவர்களையும், சமாதானப் பேச்சுக்களின் போது அவற்றிக்கு முட்டுக்கட்டை போடுபவர்களும் இவர்களை வைத்துக் கொள்கின்றனர். அதாவது இனத்தின் விரோதிகளாக இவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஆனால் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இது தெரியாததல்ல. இவர்கள் தெரியாமல் தம் இனத்திற்கு துரோகம் இழைக்கவில்லை. தெரிந்து கொண்டே இதனைச் செய்கின்றனர். அவ்வாறு இல்லாது விட்டால் அரசாங்கம் தன்னை அப்பட்டமாக கைவிட்டபோதும் அவர் மௌனம் சாதித்துக் கொண்டிருக்கமாட்டார். அரசு தமக்குத் துரோகம் இழைத்துவிட்டதாகக் கூக்குரல் இட்டிருப்பார்/இட்டிருக்க வேண்டும் அவ்வாறு இல்லாது விட்டால் தனது குற்றச்சாட்டின் மீது இவரே நம்பிக்கை அற்றவராய் இருத்தல் வேண்டும்.

ஆனால் டக்ளஸ் தேவானந்தா அவ்வாறு எதுவும் செய்யவில்லை. அமைச்சுப்பதவியில் ஒட்டிக் கொண்டு இருப்பதிலும் சுருட்டிக் கொள்வதிலுமே குறியாக உள்ளார். ஏனெனில் அவருக்கு இதனைவிட்டால் வேறு வழியும் இல்லை போகஇடமும் இல்லை ஆகையினால் சுருட்டிக் கொள்ளக் கூடியதை சுருட்டிக் கொண்டு இறுதிவரை துரோகியாக வாழ்வதே அவரது ஒரே தேர்வாக இருக்க முடியும்.

ஆனால் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் சரி அவரைப் போன்ற வேறு யாருக்காயினும் சரி ஒரு துயரம் நிகழுமாயின் அவர்கள் அனாதரவானவர்களாகி விடுவார்கள் என்பதற்கு தற்போதைய நிகழ்வுகளே போதுமானதாகும். சுருக்கமாகக் கூறுவதானால் துரோகி என்ற பட்டத்துடன் இவர்கள் அனாதரவாகிவிடுவார்கள்.

### கொழும்பு மருதானை ஆலயத்தில்

## விமானப் படைத்தளபதி வழிபடுவதற்காக

# பக்தர்கள் படையினரால் விரட்டியடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைத் தளபதியின் இடையூறால் இந்து பக்தர்கள் வழிபாடு செய்ய முடியாமல் போன சம்பவம் கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

சென்ற வெள்ளி மருதானை கப்டன் கார்டென் கோவிலில் காலைப் பூசைக்காக நூற்றுக்கணக்கான இந்து பக்தர்கள் கூடிநின்ற வேளை விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா மெய்ப்பாதுகாவலர்களுடன் அங்கு வந்தார்.

பக்தர்களை மெய்க்காவலர்கள் அப்பால் விரட்டிவிட்டனர். சமயக் கிரியைகளில் பங்கு பற்றவிடாது தம்மை விரட்டியதை அடுத்து பக்தர்கள் அம்மெய்க்காவலர்களிடம் பூசையில் பங்குபற்ற அனுமதிக்குமாறு மன்றாடிய போதும் அவர்கள் பிடிவாதமாக மறுத்துவிட்டனர்.

இதனால் குறித்த பக்தர்கள் வழிபாடு செய்ய முடியாது ஏமாற்றம் அடைந்ததுடன் கடும் சினமடைந்து விமானப்படையினரின் இந்த அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற அனுபவம் தமக்கு முன்னெப்பொழுதும் ஏற்பட்டதில்லையென அவர்கள் கூறியுள்ளனர்.

அகில இலங்கை இந்து காங்கிரஸின் பொதுச்செயலாளர் கந்தையா நீலகண்டன் இதனை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன் இது ஒருவருந்தத்தக்க செயல் என்று கூறியுள்ளார். இது குறித்து விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கையில்; தளபதிகள் பூசையில் பங்குபற்றுவது வருடாந்தம் நடைபெறும் வழமையான நிகழ்வு என கூறியுள்ளனர். விமானப்படையினர் வேண்டுமென்றால் வேறொரு நாளில் தமது வழிபாட்டை வைத்துக் கொள்ளட்டும் வெள்ளிக் கிழமை இந்துக்களுக்கு விசேடமான ஒரு தினம் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளட்டுமென இந்துக்கள் கூறியுள்ளனர்.

# மாகாண சபைகளின் செயற்பாடு குறித்து ஆராய ஆளும் கட்சியினர் விசேட குழு அமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன இணைந்து குழுவொன்றை அமைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வடக்கு கிழக்குத் தவிர்ந்த 7 மாகாண சபைகளும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் வந்ததனை அடுத்து அவற்றின் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடனேயே இந்த இணைந்த குழு அமைக்கப்படவுள்ளது. மாகாண சபைகளின் சிறந்த நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் குறித்து இந்தக் குழு ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மாகாணசபைகளில் எந்த அமைச்சுப் பொறுப்புகளையும் தாம் ஏற்கப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். மாகாண சபை முறை அவசியம் அற்றது எனக் கருதும் நிலையில் அதனைப் பலப்படுத்தும் அவசியம் மக்கள் விடுதலை முன்னணிக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள விமல் வீரவன்ச மாகாண சபைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை கூட்டு முன்னணி என்ற வகையில் குறிப்பிட்ட குழு இணைநது திட்டமிடும் எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்கள் நாளை சனாதிபதி செயலகத்தில் கூடவுள்ளனர். இதன் போது வெற்றிபெற்றுள்ள மாகாண சபைகளில் ஆட்சியை நடத்திச் செல்வது தொடர்பாகவும், மத்திய அரசாங்கத்தின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளது. (32)

# ஏழு தினங்களுக்கு கூட்டங்கள் நடத்த தேர்தல் சட்டங்களின் கீழ் தடை

(கொழும்பு)

மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் தொடக்கம் ஏழு நாட்களுக்கு கூட்டங்கள் கூடுவதற்குத் தடைவிதிக்கப் பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஏழு தினங்களுக்குள் கூட்டங்களை நடத்துபவர்கள் தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தேர்தல் நடைபெற்ற ஆறு மாகாணசபைகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர் இடம்பெறும் வன்முறைகளைத் தடுப்பதே இதன் பிரதான நோக்கமென்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலை உரிய முறையில் நடத்துவதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்ததாக பொலிஸ தேர்தல் செயலகத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மாகாண சபைத்தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 384 ஆக அதிகரித்துள்ளது.

இவற்றில் குற்றவியல் தொடர்பாக 95 சம்பவங்களும், தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாக 289 சம்பவங்களும் இடம் பெற்றதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி I (2000) எதிர்வரும் 26.07.2004 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றன. இம்முறை இப்பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் மட்டும் நடைபெறும். நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும், அலுவலக நேரத்தில் 19.07.2004 முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் கொள்ளலாம். (36)

# மீண்டும் சுகாதார சேவை ஊழியர்கள் 16 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

சுகாதாரசேவை ஊழியர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர். தமது சம்பள முறுகலைத் தீர்க்கக்கோரி கடந்த வாரம் பிரதமமந்திரியுடன் சுகாதாரசேவை ஊழியர்கள் பேச்சு நடத்தினர். எனினும் இதுவரை அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே தமது கோரிக்கையை வலியுறுத்தியே அவர்கள் 16 ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

அண்மையில் அரச ஊழியர்கள் கோரியபடி சம்பள உயர்வு வழங்க முடியாதெனவும் பிரதமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையும் அமெரிக்காவும் நேற்று முதலீட்டு வரிவிலக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தில் நிதியமைச்சின் செயலரும், அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லங்கஸ்டெட்டும் கைச்சாத்திட்டனர். இதன்மூலம் அமெரிக்காவின் முதலீடுகளின் போது இலங்கையில் ஆரம்ப வரியை மாத்திரமே அறவிட வழி செய்யப்பட்டுள்ளது. முன்னர் ஒவ்வொரு தடவையும் முதலீடு மேற் கொள்கின்ற போதும். வரியைச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

# தமிழீழத் தேசியக் கொடியேற்ற படையினர் தடை

## தடையை மீறி புலிக்கொடி ஏற்றப்பட்டது

பொது நிகழ்வுகளில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைப்பது தொடர்பாக படைதரப்பின் ஆட்சேபனைகளை அடுத்து மீண்டும் முறுகல் நிலையொன்று யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் நேற்று மாலை வடமராட்சியின் வதிரிப் பகுதிக்கு விஜயம் செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருகையில், வடமராட்சியின் வதிரி ஆலங்கட்டு பொது மைதானப் பகுதியில் உள்ளூர் விளையாட்டுக் கழகங்களின் ஏற்பாட்டில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் புலிக்கொடி ஏற்றப்பட்டு உதைப்பந்தாட்டப் போட்டிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.எனினும் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டது தொடர்பாக தமது ஆட்சேபனையை தெரிவித்திருந்த படைத்தரப்பு இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தது.

இதனையடுத்து அங்கு விரைந்த போர்நிறுத்தக் கண்காணிப்புகுழு பிரதிநிதிகள் அங்கு தமது ஆட்சேபனையை எழுப்பியிருந்தனர்.எனினும் அரச திணைக்களங்களது நிகழ்வில் மட்டுமே தமிழீழ தேசியக்கொடி ஏற்றக் கூடாதென புலிகள் - படைத்தரப்பிடையே முன்னர் இடம்பெற்ற பேச்சில் முடிவு செய்யப்பட்டிருப்பதை குறித்துக்காட்டி கொடியை அகற்ற மறுத்து விட்டனர். நீண்ட வாக்குவதங்களின் பின்னர் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

இதனிடையே அண்மையில் வரணிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலும் இவ்வாறான சர்ச்சை எழுந்து மக்கள் எதிர்ப்பால் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது (27)

# கூட்டுப்படைத் தலைமை அதிகாரியை தெரிவு செய்யக் குழு நியமனம்

சிறிலங்காவின் கூட்டுப்படைத் தலைமைத் தளபதியாக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்க பாதுகாப்பு அமைச்சு, குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தப் பொறுப்பில் இருந்து முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இளைப்பாறிய பின்னர் அந்த வெற்றிடத்திற்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, நியமிக்கப்படவிருந்தார். எனினும் அதனை தரைப்படையினர் விரும்பவில்லை. இதனையடுத்தே இந்த வெற்றிடத்தை நிரப்பும் கடமைக்கென புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஆளும் கட்சி இன்று ஆராயும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது தொடர்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டமொன்று இன்று சனாதிபதி சந்திரிகாவினால் நடாத்தப்படவுள்ளது.

முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள போதிலும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கலந்து கொள்வார்களா? என்பது குறித்து தெரியவரவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிய வருகின்றது. (32)

# மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயக் குழு ஒன்று நியமிக்க முடிவு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக நேற்று வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் காரியாலயத்தில் இடம்பெற்ற மாதாந்தச் சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 3. 00 மணியளவில் வைரவர்புளியங்குளம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட இராணுவத் தளபதி சிசிர விஜயசூரிய, டி.ஐ.ஜி. மிஸ்கின், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல், மகளிர் பொறுப்பாளர் அலை மற்றும் பல இராணுவ, பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் மக்கள் குடியர்வது தொடர்பாக ஆராய பிரசன்னமாகி இருந்தார். வவுனியா மாவட்டத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ள கோதாண்ட நொச்சிக்குளம், காக்கையன்குளம், கல்மடு, இரணை இலுப்பங்குளம் போன்ற பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவதுடன் அவர்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்து விவசாய நடவடிக்கைகளுக்கு அனுமதிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது எதிர்வரும் 23 அல்லது 29ஆம் திகதி அரச செயலக அதிகாரிகள், இராணுவம், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அடங்கிய குழுவினர் சென்று ஆராய இருப்பதாகவும், இதன் பின்னர் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக முடிவு காணப்படும் என்று இணக்கம் காணப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் தெரிவித்தார். (21)

### ரட்ண...

இதனால் பயணம் செய்த மக்கள் ஒன்றரை மணித்தியாலயங்களுக்கு மேல் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது, தொடர்ந்து 12.45 மணியளவில் மீண்டும் போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வழமை போல இயங்கியது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (36)

### யாழ்...

நாகர்கோவில் மற்றும் கிளாலி பகுதிகளுக்கும், தென்மாரட்சி தெற்கு கரையோரப் பகுதிகளுக்கும் குழு விஜயம் செய்துள்ளது.

கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதுடன், பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக ஆராய்வதுமே பயணத்தின் நோக்கமெனவும் தெரிவிக்கப்பட்டது.

அவர் அங்கு படையினர் மத்தியில் உரையாற்றுகையில் யாழ். குடாநாட்டில் பலவருடங்களாக வசதிகள் குறைந்த நிலையில் கடமையாற்றும் இராணுவத்திற்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும்,

இதற்காக இராணுவத்திற்கு புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் அங்கு அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பப்படுவதுடன் யாழ். குடாநாட்டிற்கும் தென்பகுதிக்கும் இடையிலான படையினருக்குத் தேவையான போக்குவரத்தையுமே மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் யாழ். குடாநாட்டின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திற்கும் முகமாலைச் சோதனைச்சாவடிக்கும் விஜயம் செய்து படைத்தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# யாழ். நகரப் பகுதி சென்ற மாணவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிக்கு ஆசிரியருடன் கூடிச் சென்றிருந்த மாணவன் ஒருவன் காணாமற்போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும் இராஜகோபால் கஜேந்திரன் (வயது-18) எனும் மாணவனே காணாமற் போயுள்ளார்.

கடந்த 5ஆம் திகதியன்று நயினாதீவிலிருந்து படிக்கும் பாடசாலை ஆசிரியரொருவருடன் குறித்த மாணவன் யாழ். நகரப் பகுதிக்கு வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும், ஒருவார காலத்தைக் கடந்துள்ளபோதிலும் குறித்த மாணவன் இதுவரை வீடு திரும்பியிருக்காததையடுத்தே அவனது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனிடையே குறித்த பாடசாலை மாணவனை அழைத்து வந்திருந்ததாகக் கூறப்படும் ஆசிரியரும் காணாமற்போயிருப்பதாக மற்றுமோர் செய்தி தெரிவிக்கின்றது. (27)

# மக்கள் மாகாண சபையை நிராகரிப்பதை நடந்து முடிந்த தேர்தல் கூறும்

## ஹெல உறுமய தெரிவிப்பு

"நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளின்படி நோக்குமிடத்து மக்கள் மாகாண சபை முறையை நிராகரிப்பது தெளிவாகிறது" எனஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். சிங்கள நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் அவர் தெரிவிக்கையில் இத்தேர்தலில் 45 வீதமான மக்கள் வாக்களித்திருப்பதாகவும், 1988ஆம் ஆண்டு 49-7 வீதமானோர் வாக்களித்துள்ளதாகத் தெரிவித்த அவர் இத்தேர்தலை பகிஷ்கரிக்குமாறு மக்கள் கூறியதால் தமக்கு அளிக்கப்படவிருந்த வாக்குகள் அரசுக்கு கிடைக்காமல் விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாகாண சபையை நீக்கும் சட்ட மூலம் ஒன்றை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்போம் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

### சமாதானப்...

பேசி வந்த ஜே.வி.பி புலிகளுக்கும் சமாதானத்திற்கும் எதிராக பகிரங்கமான போராட்டமொன்றை முதற் தடவையாக ஆரம்பித்திருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்...

இவர்களிடமிருந்து ஏ.கே.47 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டன. சமீப காலமாக மட்டு மாவட்டத்தில் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் நபர்கள் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு வருவதுடன் அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து இவ்வாறான தேசவிரோதிகளை இனம் கண்டு கைது செய்வதற்கான நடவடிக்கை யினை விடுதலைப்புலிகள் தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நோர்வேத்...

பாட்டை விளக்கினர். போர் நிறுத்த உடன்பாட்டில் கண்காணிப்புக்குழுவிற்கு இருக்கும் பொறுப்புக்களை அவர் மீண்டும் ஒரு முறை வலியுறுத்தினார். இவற்றை ஏற்றுக்கொண்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் அரசாங்க தரப்புடன் இது தொடர்பில் கலந்துரையாடப்போவதாகத் தெரிவித்திருந்தார். (32)

### கொழும்பு...

அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கைகளை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தி உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய மற்றும் சனநாயக இலங்கைக்குள் உள்ளூர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்கு மாகாண சபைத் தேர்தல்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சனாதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறில. புலனாய்வுத்துறையினரின் நடவடிக்கை குறித்து முறைப்பாடு

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப்புலிகளால் தேசிய நிகழ்வு அல்லது கலை நிகழ்வு நடாத்தப்படுகிறபோதிலும் நடத்திய பின்னர் அந்த நிகழ்வு நடைபெற்ற கிராமத்தில் உள்ள மக்களைப் புலனாய்வுத்துறையினர் சென்று விசாரிப்பதாகவும், இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்றும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் படையினரிடம் கேட்டுள்ளார்.

நேற்று வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக் காரியாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இவ்வாறு கேட்டுள்ளார்.

இவ்வாறு இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரும் காவல்துறைப் புலனாய்வுத்துறையினர் நடந்துகொள்வதால் மக்கள் மத்தியில் அச்சத்தையும், பெரும் பீதியையும் ஏற்படுத்த இவர்கள் முனைவதாகவும் தெரிவித்தார். இவ்வாறு இனிமேல் இடம்பெறக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

இது சம்பந்தமாக தாம் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்வதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (21)


எம்மைவிட்டுப்பிரிந்த





தேவதாசன் உதயகுமாருக்காக

உள்ளத்தால் அழுகின்றோம்

திரு இங்கிலிஷ், திருநகர்
வழிகாட்டிகள், பயிலுனர்கள். (4809)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.